நகரத்தார்



நகரத்தார்

திங்கள் இதழ்

61. D, உசுமான் சாலை - சென்னை -17.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு

சௌமிய ஆவணி * ஆகஸ்ட் - 17, 1969

ஆண்டுக் கட்டணம் ரூ. 3-50

ஆசிரியர் பரிந்துரையாளர்
புலவர்நாகசண்முகம் எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல்.

குறிப்பு ஒன்று — பேரேடு ஐந்து

மாணிக்கக் கேள்வி? அடுத்த பக்கம்
சிறுகதை பெருங் கதையான கதை பக்கம் 8

மாணிக்கக் கேள்வி?

கேட்பவர்

கருமுத்து தி. மாணிக்கவாசகம் செட்டியார் அவர்கள்

கேள்வி

வான் பொய்ப்பினும் வையத்து நீதிகள் பொய்ப்பினும் தேன் கசக்கினும் தெள்ளமுது நஞ்சு ஆயினும் தாம் பொய்யாத தவ வலிமை மிக்கவர் வசிட்டர்.

ஆய்ந்து தேர்ந்த அறிவின் மிக்கவரான அவர்தான் இராம பிரானது முடிசூட்டு விழாவிற்கு நாள் குறித்தார். நல்லவேளை இதுவென்று பொழுதினைக் கணித்துப் புகன்றார்.

அவர் குறித்த நாளில், புகன்ற வேளையில் விழா நடந்ததோ? வென்றாரா வசிட்டர்!

இக் கேள்விக்கு ஆராய்ச்சி நோக்கில், நம் இதழில், இரண்டு பக்க அளவில், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.

நடுவர்கள்

திரு. கருமுத்து தி. மாணிக்க வாசகம் செட்டியார், பி.ஏ. அவர்கள்
திரு. எம். எஸ். மெய்யப்பன், பி.இ. அவர்கள்
திரு. டாக்டர் தமிழண்ணல் இராம பெரியகருப்பன் அவர்கள்
திரு. ஆறு. அழகப்பன், எம்.ஏ. எம்.லிட் அவர்கள்
திரு. எஸ். பிஎல். பழநியப்பா, பி.ஏ., பி.எல். அவர்கள்

முடிவு தேதி கார்த்திகைத் திங்கள் 30ம் நாள்

முதல் தகுதி உடைய மாணிக்கக் கட்டுரையை தருகிறவருக்கு மாணிக்கமான சிறப்பு உண்டு. பக்கம் 8ஐப் பாருங்கள்.

அடுத்த இதழில்

சேலம் நகரத்தார் சங்கச் செயலாளரின் திட்டம்
திருச்சி நகரத்தார் சங்க வரலாறு.
ஈரோடு நகரத்தார் சங்கத்து இரண்டாம் ஆண்டு விழா நிகழ்ச்சிகள்.

உ

சிவமயம்



சிந்தனைக்கு !

பிறப்பால் வைசியர்கள் நம் மரபினர். தொன்று தொட்டுத் தொலைவுகளுக்குச் (அயல் நாடுகளுக்குச்) சென்று, கொண்டு விற்று வருதல் நம் தொழிலாக இருந்தது. வட்டித் தொழில் நம் குலத் தொழில். இன்றைய வங்கி முறைகளுக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே, இன்று பெரிதும் வழக்கத்திலிருக்கும் தவணைப் பணம், நடப்புக் கணக்கு, உண்டியல் முறை முதலிய வங்கி நடப்பு முறைகளை நாம் பின்பற்றி வந்துள்ளோம். அதனால்தான் நம் நாட்டில், கிளைகள் மிக்க வங்கிகளுள் இந்தியன் வங்கி, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி ஆகிய இரு பெரும் வங்கிகளைத் தொடங்கி நடத்தி நம்மவர்கள் பெருமை பெற்றார்கள். இன்று அப் பெரு வங்கிகளெல்லாம் நாட்டுடைமை ஆக்கப்பெற்றதை நாம் அறிவோம்.

நம் மக்களிடம் சுதந்திரத்திற்குப்பின் ஏற்பட்ட மாறுதல்கள் எத்தனை, எத்தனையோ! இரண்டாம் உலகப் போருக்குப்பின் ஏற்பட்ட விழிப்புணர்ச்சியால், திறந்திருந்த தொலைநாடுகளின் கதவுகள் அடைக்கப்பட்டன; அடைபட்டு வருகின்றன. இதனால் ஏற்பட்ட ஒரு பெரு நன்மை உள்நாட்டுத் தொழில்கள் பெருகவும், பரவவும் தொடங்கின. சுமார் 20, 30 ஆண்டுகளுக்குள், உள் நாட்டில் தொழில் தொடங்கியவர்கள் எல்லாம் மிகவும் உன்னத நிலையில் உள்ளனர். வட்டித் தொழில் தவிர, பிற தொழில்களிலும் விரிவாக ஈடுபடத் தொடங்கினர். நூல், நெசவு ஆலைகள், சைக்கிள், ஸ்கூட்டர், முதலிய வாகன உற்பத்தி, ஏற்றுமதி வாணிபம், திரைப்படத் தொழில், மருந்தகங்கள், ஹோட்டல் தொழில், காபி, டீ, ஏலக்காய்த் தோட்டங்கள், அச்சகங்கள் முதலிய பல்வேறு சிறு, பெருந் தொழில்களிலும், பலரும் வியந்து பாராட்டும் வகையில் இன்று நாம் முன்னேற்றங் கண்டுள்ளோம்.

எனினும், நம்மவர்களில் பெரும் பகுதியினர் வட்டித் தொழிலேயே பல விதங்களில் (அதாவது நகை அடகு, கிஸ்தி, ஹையர் பர்சேஸ் (Hire-purchase) செய்து வருகின்றனர். நாட்டுடைமை ஆக்கப்பட்ட வங்கிகள் இத் துறைகளிலும் அதிகமாக ஈடுபடுவதனை ஒரு குறிக்கோளாகக் கொண்டுள்ளதால், காலப் போக்கில் நம் வட்டித் தொழிலே, அது பாதிக்கும் வாய்ப்புண்டு. வருவதனை முன்கூட்டியே அறிந்து நன்மை தீமை தெரிந்து செயலாற்றும் நாம், வங்கிகள் நாட்டுடைமை ஆக்கப்பட்டதன் விளைவுகளுக்கு ஏற்ப, நம் தொழில் முறைகளையும் மாற்றி அமைத்துக் கொள்ள முனைவது சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

வியாபாரமே நமது தொழிலாதலால் நாம் எத் தொழிலிலும் வெற்றி காண முடியும். பலர் இன்று பல தொழில்களிலும் சிறந்து விளங்குகிறார்கள். புதிய முயற்சிகளில் ஈடுபடுவது நமக்குப் புதிதன்று. விடாமுயற்சி, சிக்கனம், உழைப்பு இம் மூன்றும் கொண்ட நாம், புதிய தொழில்களில் வெற்றி காண்பது உறுதி

"எத்தொழில் எத்தன்மைத்தாயினும்
அத்தொழில் நம் உடைமை"

என்று கொண்டு, தொழிலில் புதிய உலகம் காண்போம்.

நல்வாழ்வு!

"பதினாறும் பெற்றுப் பெரு வாழ்வு வாழ்க" இது வாழ்த்தும் மரபு. பதினாறு பிள்ளைகளைப் பெற்றுப் பெரும் வாழ்வு வாழும்படி இன்று அதனைக் கேலியாகச் சொல்லுகிறோம். ஆனால், உண்மையிலேயே பதினாறு பெற்றால் அவர்கள் நிலை என்னவாகும். இதனை உங்கள் ஊகத்திற்கே விடுகின்றோம்.

இன்றைய விஞ்ஞான உலகத்தில் சந்திர மண்டலத்தில் அடி வைத்துச் செவ்வாய் மண்டலத்திற்குச் சென்றுவர முனைந்துள்ளோம். மிக வேகமாக முன்னேறி வரும் இந் நாளில் ஒருவரைப் பற்றி ஒருவர் சிந்திக்கவோ, கவலைப்படவோ பொழுது கிடையாது. நம்மை நாமே நம்பி வாழ வேண்டிய நிலை வளர்ந்து வருகிறது. மக்கட் பெருக்கத்தினால் வாய்ப்புக்கள் குறைவு. எதிலும் போட்டி மனப்பான்மை. பணப் பெருக்கத்தினால் வாழ்க்கைச் செலவு கூடுதல். இதனால் வாழ்க்கைச் சுமை அதிகமாகி வருகின்றது. இந்நிலையில் பகுத்தறிவுள்ள நாம் சிந்தித்துச் செயலாற்றுவது நம் கடமையன்றோ? குழந்தைகள் குறைவாக இருந்தால் குடும்ப வாழ்க்கை இனிமையாக இருப்பதில் தடை என்ன? அறிவு நிறைந்த, ஆரோக்கியமான குழந்தைகள்! ஆனந்தமான தம்பதிகள்! அளவற்ற இன்பம் பெற அளவான குடும்பம்! இதுவே இன்றைய உலகின் தத்துவம். நாமும் அதன் படி உலகத்தோடு ஒன்றி வாழ்வோமாக.

தம்பிக்கு

(முதல்வர் வெ. சு. அழகப்பன், எம்.ஓ.எல்,
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச்சிவபுரி)

[இஃதோர் கற்பனைக் கடிதம். நகரத்தார் நம்பி, நங்கையரின் கல்வி நிலைகளைப்பற்றி விவரிப்பதாகும்.]

சௌமிய ஆடி மீ 16உக்கு ஜூலை 31உ

அன்புள்ள தம்பி கண்ணப்பனுக்கு,

நல்வாழ்த்துக்கள். நலம். நலம் தெரிய விருப்பம். நின் ஆடி மீ 12உ கடிதம் கிடைத்தது. நின் கல்லூரியில் வேலை நிறுத்தம் மாணவர்கள் நடத்திய காரணத்தால் தேர்வு நடக்கவில்லையென்றும், மீண்டும் கல்லூரி திறக்க இருப்பதாகவும் எழுதியிருக்கிறாய். இவைபோலும் செயல்கள், இந்நாளில் பொது நிகழ்ச்சியாகிவிட்டன. கல்லூரிகட்குள்ள அணிகளில் இவை முக்கியமானவை என்பதாக நீங்கள் நினைக்கலாம். மீண்டும் திறந்ததும் எத்தனை நாள் ஒழுங்காகக் கல்லூரி நடக்குமோ தெரியவில்லை என்றும் எழுதியுள்ளாய். நீ ஆதிமுதல் நம் அப்பச்சியின் பார்வையிலும், என் கண்டிப்பிலும் ஓவியமாக வளர்ந்தவனாகையால் நாடோறும் பயிலும் நல்ல பயிற்சி ஏற்பட்டது. சோராமல் கற்றதைச் சோதனை செய்துகொள்ள வாய்ப்பில்லாமல் போகிறது. மைதானத்தில் காரோட்டிப் பழகினாலும் மவுண்டுரோட்டில் காரோட்டினால்தானே திறமை விளங்கும்?

மாணவர்களின் கல்விக்கழக அமைப்பில் ஊடாடுதலால் பத்துப்பேர் செயலால் இரண்டாயிரம்பேர் கற்கவும் கற்றதை எழுதிப் பயிலவும் வாய்ப்பில்லாமல் போகிறது என வருந்தி எழுதியுள்ளாய். இது உண்மை. இரண்டு, கெட்ட பழம் ஐம்பது நல்ல பழத்தையும் கெடுத்துவிடும். இது இயல்பே. நாற்பத்தெட்டுப் பழம் நல்லபடியாக இருக்கவேண்டுமானால், இரண்டு கெட்ட பழத்தைத் துணிந்து வீசி எறிவதைப்போல் கற்கத் தடையாக இருப்பவரின் செயலை—பேச்சைப் புறக்கணிக்கும் துணிவு, பிற நல்லமாணவர்கட்கு வரவேண்டும். தீய கூட்டுணர்ச்சிக்கு இடந்தரலாகாது. நினைத்ததைச் சாதிப்பது என்பதற்காகக் கூட்டமாகக்கூடிக் கூவி நிற்பது, இன்றைய அரசியலில் முக்கிய ஆயுதமாகும். இந்த அரசியல் ஆயுதம்—கேடான வழி—இன்று கல்வி நிலயங்களிலும் நுழைந்து பரவி வருகிறது. அறமில்லாப் போராட்டம் ஆக்கம் தர இயலாது. இதனை இப்படியே விட்டால், எதிர்கால இந்தியா தாங்க இயலாமல் தவிக்கும். நோய் முற்றி, உருக்கி, உலைத்தபின் மருந்துண்டால் பயன் உண்டா? ஆகவே அரசியல் உலகமும், ஆசிரியர் உலகமும் மாணவர் உலகமும் இது

பற்றி எண்ணிப்பார்த்துத் தீர்வு காணல் வேண்டும். அரசிடம் உறுதியும், ஆசிரியரிடம் அன்பும், மாணவர்களிடம் தெளிவும் இருக்குமானால் ஒருவேளை இவற்றைத் தடுக்கலாம்.

உன் கடிதங்களில் (தமிழிலும் சரி – ஆங்கிலத்திலும் சரி) பிழைகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. இன்று மொழிக் கல்வியில் அழுத்தம் இல்லை. ஒரு பிடிப்பில்லை. மொழி மரபு தெரிய வில்லை. எழுத்து வடிவமும் நன்றாக இல்லை. வெற்றார்வத்தால் என்ன பயன்? நீ எவ்வளவோ பரவாயில்லை. ஆனால் மற்றவர்கள் நிலை என்ன? ஏன்? நம் தங்கையின் மடல்களில்தான் எத்தனை பிழை மலிவுண்டு! எழுத்துப்பிழை - தொடர்ப்பிழை - மாறான சொல்வருகை - கருத்தொருமை இன்மை - ஆகியவை பெருகிவரக் காண்கின்றேன். ஒலிப்பிழையும் அதிகமாகிவிட்டனவே...தமிழ் குற்றுயிரும் குலையுயிராகவுமே வளர்ந்து வருகிறது. வாலைக் குமரியின் வளர்ச்சி இல்லை.

இந்நாளைய நம் தலைமுறையினர் மனத்தொடுபடாத - வெறும் நெட்டுருச் செய்கின்றனர். வாய் அலறியும், கடந்தும், திரிந்தும், படுத்தும் படித்தால் மனதில் பதியுமா? இன்ன குறைகட்குக் காரணம் யாவை.

1. தொடக்கப் பள்ளி, 2. உயர்நிலைப் பள்ளி, 3. கல்லூரி ஆகிய மூன்று நிலைகளிலும் தவறுகள் உண்டு.

(1) தொடக்கப்பள்ளியில் உள்ள குறைகளே மிகுதி. (அ) வகுப்பில் மாணவர்கள் எண்ணிக்கை மிக அதிகம். (ஆ) முறை வைத்து ஒலித்தல், பல பக்கம் எழுதல் ஆகிய செய்முறைப்பயிற்சி இல்லாமை. (இ) தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள் சோம்பலாலும் கவனக்குறைவாலும் மாணவரைத் திருத்தாமையும் தாமும் திருந்திய முறையில் கற்பிக்காமலும் இருத்தல்.

(2) (அ) உயர்நிலைப்பள்ளியில் மாணவரை வேலை வாங் காமை. (ஆ) பல சொல்லறிவைப் பெருக்காமை. (இ) மாணவர் உழைக்காமை.

(3) (அ) கல்லூரியில் திடீர் என்று திருத்த இயலாமை (ஆ) திருத்தப்புகினும் பழக்க வலிமையால் பயன் விளையாமை. (இ) பாடங்கள் மிகுதியாக உள்ளமையால் அதை முடிக்கப் பர பரப்பு. (ஈ) கல்லூரியாசிரியர்களின் சோர்வு. (உ) மாணவரின் ஆர்வமின்மையும் மெத்தனமும். (ஊ) பெற்றோர், தம் மக்களின் கல்விக்காக ஒவ்வொரு நாளும் எந்த அக்கறையும் காட்டாமை.... என்ற இன்ன காரணங்களால் தக்க கல்வியை நன்முறையில் பெற இயலவில்லை.

கல்லூரி அளவில் பார்க்கும்போது, நம்பியரை விட நங்கையரின் கல்வித் திறன் சிறப்பாகவே உள்ளது. அதற்குக்

காரணமும் உண்டு. மகளிர்க்கு அரசியலிலும் கட்சிகளிலும் தனி ஆர்வமும் உணர்ச்சிப்பூர்வமான நடவடிக்கையில் இறங்கும் வேணவாவும் இல்லே. இவை பற்றி அறிந்துள்ளனரே தவிர களத்தே குதிக்கும் கடும்வேகம் இல்லே. மேலும் புறக்கவர்ச்சியாக மாணவர்க்குள்ளனபோல் மகளிர்க்கு எதுவும் தீவிரமாக வேறு இல்லே. ஆகவே பெண்டிர் நல்ல தேர்ச்சி பெறுகின்றனர். நம் குலப்பெண்கள் பி.யு.சி. வரையிலாவது பயில்வது இன்றியமை யாததாகும். ஆடவர்களாகிய நின்போல்வாரும் தீவிர நடவடிக் கையில் ஈடுபடாமல் பெண்கள்போல் அறியும் அளவில் நின்று படிப்பில் கவனம் செலுத்தல் சாலும்.

உன்னே பி.கா.மில் சேர்க்க நான் கல்லூரிக்கு வந்தபோது, நம் இன மாணவர்கள் எத்துறையைப் (Course) பயில்வதற்குத் தேர்ந்தெடுக்கலாம் என்பது குறித்துப் பேசிய பேச்சைக் கேட்க நேர்ந்தது. உள்ளூர வருந்தினேன். ஏன் தெரியுமா? மந்தை மனப்பான்மை இருந்ததுதான். எல்லோரும் பி. எஸ்ஸியை மட்டுமோ, பி.காம்மை மட்டுமோ விரும்பியமைதான். நம் சக்திக்கு ஏற்பக் கனத்தைத் தூக்குகிருேம். அதுபோல் மாணவர்கள் தம் படிப்புத் திறனுக்கும், தம் பாடச் சுவைக்கும் ஏற்ற துறையைத் தேர்ந்தெடுப்பதே முறையும் முன்னேற வழியு மாகும். எல்லா மாணவர்களும் மேற்கண்ட இரு பகுதிகளேயே கேட்டால் எப்படி? தேற வேண்டாமா? மேலும் வேலே வாய்ப்பும் குறையுமல்லவா? தமக்குமாருன துறைகளே அல்லது சரிவர வராத—மதிப்பெண் பெருத துறைகளேக் கேட்பதும், பெறுவதும் குறிக்கோள் இல்லாத வாழ்க்கையாகப் போய்விடும். இன்ன ஊருக்குப்போவது என்ற நிச்சயம் இல்லாவிடில் ஊர் போக இயலுமா? அதுபோல் கிடைத்த வகுப்பில் படிப்போம் என்பதும் பிழையான முறையே ஆகும்.

செல்வப் பிள்ளேகள் கல்யாண நோக்காயினும் சரி, கல்வி நோக்காயினும் சரி, எந்த நோக்கிலும் படிக்கலாம். எதிர்காலச் சிக்கல் அன்னவர்க்கு அதிகம் இல்லே. நடுத்தர, எளிய நம்பியர் எத்துறையில் பயில்வது?

காலந்தோறும் தேவைகள் மாறுபடும். வேலே வாய்ப்பு வேறுபடும். பொறியியல் வல்லுநர்க்கு (B.E) மூன்று ஆண்டுக்கு முன்னர் கிராக்கி இருந்தது. அந்தப் பிடிப்பில் முண்டியடித்து முயன்று படித்து முடித்து வெளிவரும் இச் சமயம், வேலேயில்லே என்று ஆகிவிட்டது. அப்படியானுல் எந்தப் படிப்புச் சரி? ஆகவே உயர் கல்வியும் ஓரளவுதான் வேலே வாய்ப்பைத் தர இயலும்.

இதனே உணர்ந்து செயற்பட வேண்டாவா? சராசரிக் கல்வித் தகுதி உடையவரும், பெரும் செல்வத் தோன்றல்களும்

கல்லூரியை நாடவேண்டுமா என்ன? போலி மதிப்பை விடுத்து— வணிகம், அரசியல் தொண்டு ஆகிய துறைகளைத் தேர்ந்தெடுக்கலாமே! பணவசதி படைத்தவர்கள் படித்துப்பட்டம் பெற்றிருந்தாலும், வேலைகளை நாடி அமராமல், அவ்வாய்ப்பை எளியாருக்கு விட்டுக் கொடுக்கலாம். தாம் வணிகங்களில் ஊக்கம் காட்டி, நம் பிள்ளைகளுக்கும் வேலைகொடுக்கும் பணியே, பணியாகக் கொள்ளலாம். இதுவே, அறிவும் ஆக்கமும் ஆகும். பண்பும் பயனும் மிகும். இதனை நன்கு உணர்ந்து உழைத்துப்படி. "உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?" நீ வணிகத்தில் நாட்டம் காட்டி முன்னேறுக. அதனைத் திறமாக நடத்தக் கல்வி பெறுவாயாக. கடிதம் நீண்டுவிட்டது. உன் எதிர்காலம் ஒளிமயமாக இருக்கவேண்டும் என்ற ஆசைபற்றி அறிவுரை வழங்கினேன்; ஏற்பாய் என்ற நம்பிக்கையால். என் நல்வாழ்த்துக்கள்.

"அறிவுடையார் எல்லாம் உடையார்; அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்"...
"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும்" அன்றோ நம் வாழ்வு.
வேணும். குற்றால நாதர்துணை.

அன்புள்ள அண்ணன்,
அழகப்பன்

சிறுகதை நெடுங் கதையான கதை!

நண்பர்கள் பலரின் விருப்பத்தால்...அடுத்த இதழில் ஆசிரியர் எழுதி, வெளிவர இருந்த பழநிமலைக் காவடி சிறு கதை, தொடர்கதையாகவே வெளிவர இருக்கின்றது என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தீபாவளிப் பரிசு

(புதுமண மக்களுக்குத் தலைத் தீபாவளிப் பரிசு)

ஐப்பசி இதழிலிருந்து

பழநிமலைக் காவடி

தொடர்கதை – வெளிவருகின்றது.

மாணிக்கச் சிறப்பு

முதல் தகுதி பெறுகின்ற கட்டுரையை எழுதுகின்றவருக்கு நடுவர்களும் ஆசிரியரும் கையெழுத்திட்ட நற்சான்றிதழ் அனுப்பப்பெறும். அத்துடன் அப்பெருமைக்குரியவர் நம் இதழில் ஆயுள் உறுப்பினராகச் சேர்த்துக் கொள்ளப்பெறுவார்.


அளவான குடும்பம் அளவற்ற இன்பம்

எஸ்.பிஎல்.பழநியப்பா பி.ஏ., பி.எல்

இன்றைய உலகம் பொருளாதார உலகம். தன் கையே தனக்கு உதவி என்று, நம்மை நாமே நம்பி வாழும் காலம். உலகத்தோடு ஒட்டிக் காலத்திற்கேற்ப வாழ வேண்டிய நிலை. இதுதான் உலகின் ஒவ்வொரு நாட்டின் நிலையுமாகும். நமது நாடும் இதற்கு விதிவிலக்கன்று. அதனால் நாம் நம் பலத்துடன் திகழ என்ன வழி? ஒரே வழி பொருளாதார முன்னேற்றம்! அது தான் மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தும்.

உலக நாடுகளை ஒப்பு நோக்கினால் இன்று அமெரிக்கா, ரஷ்யா, கானடா, ஆஸ்திரேலியா முதலிய நாடுகள் மிகவும் முன்னணியில் உள்ளன. மக்கள் பலவித நவீன வசதிகளுடன் வாழ்க்கை நடத்துகின்றார்கள். இஃது ஏன்? இதற்கு முதன்மை யான காரணம், அந் நாடுகள் மிகுந்த நிலப்பரப்பும் குறைந்த மக்கட் தொகையும் கொண்டவை. அதனால் உற்பத்திப் பெருக்கம்; மிகுந்த வளம். குறைந்த மக்கள் நிறைந்த வளத்தினைப் பெறு கிறார்கள். வாழ்க்கை வளமாக அமைகிறது. அந் நாடுகளிலேயே மக்கட் பெருக்கத்தினால் வேலையின்மை உருவாகி வருவதைக் காண்கிறோம்.

பிற நாடுகளுடன் நம் நாட்டினை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இங்கு மிகுந்த, விரைந்த மக்கட் பெருக்கம். அதற்கேற்பப் பெருகாத உணவு உற்பத்தி, வேலை வாய்ப்புக்கள். இதனால் குறைந்த வருமானம், உயராத வாழ்க்கைத் தரம். இதனைப் பின் வரும் வரை படங்கள், அதற்குரிய விளக்கங்கள் மூலம் காண்போம்.



ஏழுவரில் ஒருவர் இந்தியர்
பிறப்புக்கள்
ஒவ்வொரு 1½ விநாடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது
ஆண்டுதோறும் 2 கோடி 10 லட்சம்
ஓர் ஆண்டிற்கு பிறப்புக்கள் 2 கோடி 10 லட்சம்
— இறப்புக்கள் 80 லட்சம்
= கூடுதல் மக்கட் தொகை 1 கோடி 30 லட்சம்
கட்டுமீறிய நிலை
1966
50 கோடி
1994
100 கோடி
5,000 ஆண்டுகள்
28 ஆண்டுகள்

1. இங்கு உலகத்தின் படத்தோடு இந்தியத் துணைக் கண்டத்தின் படத்தைப் பார்க்கிறீர்கள். உலகத்தின் 2.4 சதவிகிதம் நிலப்பரப்பே கொண்டே இந்தியா, உலக மக்கட் தொகையில் 14 சதவிகிதம் பேர்களுக்கு இடமளித்துக் காப்பாற்றுகிறது.

2. நமது நாட்டில் ஒவ்வொரு ஒன்றரை விநாடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது. ஒவ்வொரு நாளும் 57,000 குழந்தைகள், அதாவது ஆண்டுதோறும் 2 கோடி 10 லட்சம் குழந்தைகள் பிறக்கின்றன.

3. ஆண்டுதோறும் பிறப்போர் 2 கோடி 10 லட்சமும் இறப்போர் 80 லட்சமும் ஆகும். ஆகையினால் 1 கோடி 30 லட்சம் மக்களை—ஆஸ்திரேலியக் கண்டத்தின் மக்கட் தொகையினைவிடக் கூடுதலாக ஒவ்வொரு ஆண்டும் நாம் பெருக்குகிறோம்.

4. இதுதான் மக்கட் தொகையின் கட்டு மீறியநிலை. 1966ஆம் ஆண்டில் நம் மக்கட் தொகை 50 கோடியினை எட்ட, பல ஆயிரம் ஆண்டுகளாயின. (வசதிக்காக 5000 ஆண்டுகள் எனக் கொள்வோம்). 1968-ல் மக்கட் தொகை 52 கோடி. இந்த வேகம் நீடித்தால் 100 கோடியினை எட்ட இப்பொழுதிலிருந்து இன்னும் 26 ஆண்டுகள்தான் ஆகும்.


பிரச்சினை
பிறப்பு விகிதம்
இறப்பு விகிதம்
1921
1931
1941
1951
1961
1966
1971
உணவு உற்பத்தி
1951 - 5 கோடி - 50 லட்சம் டன்
1966 - 7 கோடி - 20 லட்சம் டன்
மக்கட் தொகை
1951
36 கோடி 10 லட்சம்
1966
50 கோடி
தனி நபருக்கு உணவு
1951 - 12·8 அவுன்சு
1966 - 12·4 அவுன்சு.
இந்தியாவின் மக்கட் தொகை
மக்கள் கோடியில்
1901
1911
1921
1951
1961
1968
1971
இந்தியா 1968 மக்கட் தொகை கூடுதல்
1 கோடி 30 லட்சம்
அதிகப்படி தேவையான சாதனங்கள்
உணவு
12,545,300
குவிண்டால்கள்
4,000,000
துணி
190,774,000
மீட்டர்கள்
52 கோடி
வீடுகள்
2,509,000
பள்ளிகள்
1,26,500
ஆசிரியர்கள் 3,72,500

5. 1921-ல் நமது பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 49 ஆகவும் இறப்பு விகிதம் 48 ஆகவும் இருந்தது. இன்று பிறப்பு விகிதம் 41 ஆகவும் இறப்பு விகிதம் 16 ஆகவும் இருக்கிறது. ஆகையினுல் கூடுதல் விகிதம் ஆயிரத்திற்கு 25 ஆகிறது. சுகாதார வசதிகள் பெருகி, விரிவடைவதனுல் இறப்பு விகிதம் இன்னும் குறையும்.

ஆகையினுல், பிறப்பு விகிதத்தைக் குறைப்பதொன்றே இப் பிரச்சினை தீர்வதற்கான ஒரே வழியாகும்.

6. மக்கட் பெருக்கம், நாம் முன்னேற்றத்தினுல் அடைந்த பலன்களை மிஞ்சிவிட்டது. 1951 லிருந்து கடந்த 15 ஆண்டுகளில் நமது உணவு உற்பத்தி 1 கோடி 70 லட்சம் டன்கள் கூடியிருக்கிறது. ஆனுல் ஒரு நபருக்குரிய உணவு 12.8 அவுன்சிலிருந்து 12.4 அவுன்சாகக் குறைந்துவிட்டது. 3 கோடி 10 லட்சம் பேர் வேலையில் அமர்த்தப்பட்டும், 1951-ல் 3 கோடியாக இருந்த வேலை வாய்ப்பற்ருேர் 1965-66-ல் 10 கோடியாகப் பெருகி உள்ளனர். இஃது ஏனென்ருல் இந்த இடைவெளியில் மக்கட் தொகை 14 கோடி பெருகியதேயாகும்.


7. 1911 லிருந்து 1921-ல் மக்கட் தொகை குறைந்திருப்பதை இப் படத்தில் காணலாம். இது பஞ்சத்தினுலும் தொத்து நோய்களாலும் ஏற்பட்டதாகும். பல பயங்கர நோய்கள் கட்டுப்படுத்தப்பட்டுவருதலினுல், நம் மக்கட் தொகை மிக வேகமாகப் பெருக ஆரம்பித்தது. சுதந்திரத்திற்குப்பின் பெருக்கம் மிகமிக வேகமாக உள்ளது.


8. இந்த ஆண்டில் நம் மக்கட் தொகையில் கூடுதலாவது 1 கோடி 30 லட்சமாகும். இவர்களுடைய அடிப்படைத் தேவைகளைச் சமாளிப்பதற்கு அதிகப்படியாகத் தேவையான சாதனங்களின்படி கணக்கிட்டால், என்னென்ன வேண்டுமென்பதனை இங்கே காணலாம்.



இலக்கு

1976-க்குள் 1000 மக்களுக்கு
41-லிருந்து 25-ஆகப் பிறப்பு
விகிதத்தைக குறைப்பது





9. மக்கட் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்த, குழந்தைப் பேறு பெறும் வயதுடைய பிரிவினரான 10 கோடித் தம்பதிகளுக்குக் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய செய்தியினை எடுத்துச் சொல்ல வேண்டும்.

நம் மக்கட் தொகையில் ஐந்தில் இரண்டு பகுதியினர் அல்லது சுமார் 20 கோடி, 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் ஆவர்.

10. நமது இலக்கு 1000 மக்களுக்கு 41லிருந்து 25 ஆகப் பிறப்பு விகிதத்தைக் குறைப்பது. 10 கோடித் தம்பதிகளில் பெரும்பாலோர் குடும்பக் கட்டுப்பாட்டினைக் கடைப்பிடித்தாலே இது சாத்தியமாகும்.

11. நம் நாட்டிலுள்ள தம்பதிகள் ஒவ்வொருவரும் ஒரே ஒரு குழந்தை பெற நினைத்தால் பிறப்பு விகிதம் 9 சதவிகிதத்திற்கு வரும். இரு செல்வங்களானால் பிறப்பு விகிதம் 17ம், மூன்று பிள்ளைகளானால் பிறப்பு விகிதம் 25ம் ஆகும்.

12. 10 கோடித் தம்பதிகளுடன் தொடர்பு கொள்ளத் தடையாக இருப்பவைகளாவன.

(அ) பெரும் பரப்பினைக் கொண்ட நாடு—5,60,000 கிராமங்கள்; 3,000 நகரங்கள், மாநகரங்கள்.

(ஆ) குறைந்த எழுத்தறிவுடையோர்—மொத்தத்தில் 25 சதவிகிதம்; கிராமங்களில் அதைவிடக் குறைவு.

(இ) மொழி, பழக்க வழக்க வேற்றுமைகள்—14 மொழிகள், 200க்கும் அதிகமான பேச்சுவழக்குகள் மூலம் தொடர்பு கொள்ள வேண்டிய நிலை.

(ஈ) புதுமை அல்லது மாற்றத்தினை ஏற்றுக் கொள்ள மறுக்கும் வழக்கமான எதிர்ப்பு.

(உ) குறைந்த வருமானம்—தனி நபர் வருமானம் ஆண்டு ஒன்றிற்கு ரூ. 422.

இதுவரை கண்ட குறிப்புகளின் மூலம் நீங்கள் பல விவரங்களை அறிந்து கொண்டிருப்பீர்கள். உலகின் பரப்பில் மிகவும் குறைந்த பகுதி நம் நாடு. அதாவது நூற்றில் சுமார் இரண்டரைப் பகுதி. மக்களோ ஏழில் ஒரு பங்கு. இந்நிலையில் உணவுப் பிரச்சனை, வேலையின்மை, அதனால் வறுமை தவிர வேறு காணாத மக்கள் நிலை. சுதந்தரம் பெற்று இருபது ஆண்டுகளுக்குப் பின்னும்! மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்குப் பின்னும்! உணவு உற்பத்தி 2 கோடி டன்கள் பெருகியது. எனினும் கண்ட பலன், இன்னும் உணவுப் பிரச்சனை தீரவில்லை. உணவு இறக்குமதி குறையவில்லை. தன்னிறைவு காணவில்லை. ஏன் இந்த நிலை? உற்பத்தியான உணவு என்னவாயிற்று? எல்லாம் உணவு உற்பத்தியைவிட வேகமாகப் பெருகிய மக்கள் உற்பத்தியில் கரைந்து விட்டதே காரணம். திட்டங்களின் பலனை மக்கள் முழுதும் அனுபவிக்க முடியாத நிலைக்கு முழுமுதற் காரணம் மக்கட் பெருக்கமே.

ஆண்டுதோறும் சுமார் ஒன்றரைக்கோடி மக்களைப் பெருக்கும் நாம், கடந்த 5000 ஆண்டுகளில் 50 கோடி மக்களானோம். ஆனால் இன்னும் 25 ஆண்டுகளில் 100 கோடியினை எட்டிவிடுவோம் என்றால் திகைப்பாக இருக்கிறதன்றோ? இஃது உண்மை. நாம் பெருகும் அளவிற்கு உணவும், உற்பத்தியும், வேலை வாய்ப்பும் பெருக முடியாது; வழியும் கிடையாது. இதனை நாம் சிந்திக்க வேண்டாமா? சிந்தனையைத் தூண்டுவதற்கு என்ன வழி? மக்களின் முன் உண்மை நிலையை எடுத்துப் படம் பிடித்துக் காண்பித்து விளைவுகளை உணரச் செய்வது. அதனை விளக்கும் முகமாகப் மக்கட் பெருக்கத்தினையும், அதன் விளைவுகளையும், கட்டுப்பாட்டின் அவசியத்தினையும், வரைபடங்கள், அதற்குரிய விளக்கங்கள் மூலம் கண்டீர்கள் இதன் மூலம் பெரிதும் பயன் பெறுவீர்கள் என்று முழுதும் நம்புகிறேன்.

மேற்கண்ட விபரங்கள் சென்ற ஆண்டில் மத்திய அரசினரால் வெளியிடப் பெற்ற 'இந்தியாவின் மக்கட் பிரச்சனை' என்ற நூலினை ஆதாரமாகக் கொண்டது.

தென்னார்க்காடு மாவட்டமும் நகரத்தாரும்



சுப. திண்ணப்பன் எம்.ஏ., எம்.லிட்.

சைவத்தலங்களுள் சாலச் சிறந்த சிதம்பரம், வைணவர்கள் வணங்கும் திருவயிந்திபுரம், நிலக்கரி தரும் நெய்வேலி, சர்க்கரைமுதல் சாக்லெட்வரை தயாரிக்கும் நெல்லிக்குப்பம், வரலாற்றுப் புகழ்மிக்க செஞ்சி, சென்னை, ராஜதானியின் தலைநகராக இருந்த கடலூர், பலாப்பழத்திற்குப் பெயர்போன பண்ணுருட்டி, "மெயின் லயன்" "கார்டு லயன்" எனப் பிரியும் விழுப்புரம் முதலிய ஊர்களைக் கொண்டதுதான் தென்னார்க்காடு மாவட்டம். ஆசியாவிலேயே ஒப்புயர்வு அற்ற உடனுறை பல்கலைக் கழகமான அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இம் மாவட்டத்திற்கு அணியாக அமைந்துள்ளது. தேவாரம் பாடிய திருநாவுக்கரசரும், சுந்தரரும், அருட்பா தந்த இராமலிங்கரும், சிவஞான போதம் செய்த மெய்கண்டாரும் வேதாந்த வித்தகரான தத்துவராயரும், சைவத் திருமுறைகளைத் தொகுத்த நம்பியாண்டார் நம்பியும், ஆழ்வார் பாடல்களைத் தொகுத்தளித்த நாதமுனியும் பிறந்த பெருமையுடையது இம் மாவட்டம். இத்தகைய சிறப்புடைய இம் மாவட்டத்திற்கும் நகரத்தார்களுக்கும் இருக்கும் தொடர்பு பற்றிக் காண்போம்.

சமயப் பணி :

சைவர்களுக்குக் "கோயில்" எனப்படுவது சிதம்பரம் ஆகும். தெரிசிக்க முத்திதரும் திருத்தலம். சிற்பப் படைப்பின் அற்புதக் காவியம் எனக் கருதப்பெறும் நடராசப் பெருமான் திரு நடனக் கூத்திடும் இடம். நகரத்தார்கள் வழி வழிச் சைவர்களாதலின் அவர்களுக்கு இவ்வூரிடத்தும் இவ்வூர் இறைவனிடத்தும் ஈடுபாடு இருப்பது இயல்பே ஆகும். அவ்வீடுபாட்டின் விளைவாகத்தான் செட்டி நாட்டுப் பெயர்களில் சிதம்பரம், சிவகாமி, நடராசன், நடேசன் என்பன சிறப்பிடம் பெற்றுள்ளன. "சிற்றம்பலம் மேய செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" "பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" என்னும் பொன் மொழிகளுக்கு ஏற்ப அண்ணா

மலே அரசரும் தம் வாழ்நாளின் இலட்சியங்களைக் குறிப்பிடும்போது முதன்முதலில் "ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தினந்தோறும் வணங்குவேன்" என்றே தொடங்குகிறார். நால்வர் பெருமக்களும் பாடி வழிபட்ட இவ்வூரில் நகரத்தார்கள் செய்திருக்கும் பலதிறப்பட்ட அறச்செயல்களை ஒரு நூலாகக்கூட விரித்து எழுதலாம்.

"அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்" என்று ஏழாம் நூற்றாண்டில் பாடினார் அப்பர் பெருமான். அதனை இன்றும் மெய்ப்பித்து வருவது செட்டிநாட்டரசர் குடும்பத்தைச் சார்ந்த வெ சா. சத்திரமாகும். அங்கு நாள்தோறும் 50 பேருக்கு நல்லுணவு அளிக்கப்பெறுகிறது. அதன் சார்பாக நடராசப் பெருமானுக்கு நாள்தோறும் இரவு இரண்டாம் காலப் பூஜைக்கு ஒரு மூட்டை அரிசி அனுப்பும் சம்பாப் பாவாடைக் (நிவேதியம்) கட்டளை நடைபெறுகிறது அதன் விளைவாகத் தில்லை வாழந்தணர்களாகிய தீட்சிதர்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒவ்வொரு சாதம் தினந்தோறும் கிடைத்து வருகிறது.

நந்தவனமும், தேவாரப் பாடசாலையும், பள்ளத்தூர் சொ. மு. அ. மெ. அரு. குடும்பத்தினரின் பசுமடமும் வெ. சா. சத்திரத்தின் மேற்பார்வையில் உள்ளன. தெரிசனத் திருவிழாவின்போது தங்கக் கைலாச வாகனத் திருவிழா மண்டகப்படி இச் சத்திரத்தினரால் செய்யப்படுகிறது. இவ்வூரில் வேத பாடசாலைகள் இரண்டு, நகரத்தார்களால் நடத்தப்பெறுகின்றன. கோயிலுக்கு வேண்டிய சூடம், திருநீறு ஆகியவற்றைக் காரைக்குடி மெ செ. பாடசாலையார் கொடுத்துதவுகின்றனர். கோயிலில் அர்த்தசாமக் கட்டளை, அபிஷேகப் பொருள்கள் முதலியனவற்றிலும் நகரத்தார்களுக்குப் பங்குண்டு.

இங்குள்ள அரண்மனை அனைய பள்ளத்தூர் கா. பெ. குடும்பத்தார்க்குரிய அறுபத்து மூவர் குருபூஜை மடம் நகரத்தார்கள் செய்யும் அடியார் வழிபாட்டின் பெருமையை நவிலும். தேவகோட்டையார் நகர விடுதி ஒன்றும் இங்கு உள்ளது. காரைக்குடி, சொக்கலிங்க ஐயா அவர்கள் இங்கு மெய்கண்ட வித்தியாசாலையை 1923ல் நிறுவி, சைவ சித்தாந்தப் பாடங்களை நடத்தியும் நூற்றுக்கு மேற்பட்ட நூல்கள் எழுதி வெளியிட்டுமுள்ளார்கள். அவற்றுள் சிவகாமி அம்மை பதிகம், பிள்ளைத் தமிழ், சிற்சபேசர் விண்ணப்பமாலை முதலிய நூல்கள் தில்லையுடன் தொடர்புடையன. அண்மையில் அவர் தம் மகனார், பாலகவி அவர்களைக்கொண்டு மாதந்தோறும் சித்தாந்தப் பாடம் சொல்லுமாறு செய்துள்ளார்கள்.

அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் சிதம்பரம் கோவிலில் நீண்ட காலமாக இருந்துவந்த சைவ வைஷ்ணவப் பகைமையை அமைதியாக விலக்கிக் கிலகமுற்றுக் கிடந்த கோவிந்தராஜப் பெருமாள் கோவிலுக்குப் பெரும் பொருள் செலவில் திருப்பணி செய்து 25—5—'34ல் குடமுழுக்குச் செய்வித்தார்கள். இப்போது அரசர் அமைத்த கல் மண்டபமே அரியும் அரனும் அருள்புரியும் அழகார் நிலையை ஒரே இடத்தில் கண்டு வணங்க இன்றும் துணை செய்கிறது. சிதம்பரம் இளமையாக்கினார் கோயில், காரைக்குடி பெரி. க. குடும்பத்தினரால் கல் திருப்பணி செய்யப்பெற்று 1901-ஆம் ஆண்டில் குட

முழுக்குச் செய்யப்பெற்றது. அதற்கு எதிரில் உள்ள திருநீலகண்ட நாயனார் மூழ்கி இளமைபெற்ற திருக்குளமும் அவர்களால் 1941ல் புதுப்பிக்கப்பெற்றது. இங்குள்ள அனந்தீஸ்வரன் கோவிலும், நகரத்தார்கள் கட்டியதே ஆம். அண்மையிலுள்ள சிவபுரி, திருவேட்களம், திருநாரையூர், கூடலையாற்றூர் ஆகிய ஊர்களிலுள்ள கோவில்களும் நகரத்தார்களால் கட்டப்பெற்றுக் குடமுழுக்குச் செய்யப்பெற்றவை களாம். திருப்பாதிரிப்புலியூர் பாடலீசுவரர் கோவிலைக் கடியாபட்டி, நீ. சொ. குடும்பத்தினர் கட்டியுள்ளனர். மேலும் அங்கு வெள்ளி ரதம் செய்வித்து ஆண்டுதோறும் சிறப்பாகத் திருவிழா நடத்திவருகிறார்கள். வடலூர், விருத்தாசலம் முதலிய இடங்களில் நகர விடுதிகள் உள்ளன.

சிதம்பரத்தில் கோவிலூர் வேதாந்த மடத்தின் கிளை மடமாகிய பொன்னம்பல சுவாமி மடம் உள்ளது. இங்குள்ள பொன்னம்பல சுவாமியின் சமாதிக் கோவிலில் ஆண்டுதோறும் குருபூஜை சிறப்பாக நடந்துவருகிறது. இம் மடத்தின் சார்பாக நடராஜர் கோவிலில் கட்டளைகளும் உள்ளன. வேதாந்த நூல்களை இம் மடத்தினர் வெளியிடுகிறார்கள். எறும்பூரில் தத்துவராயருக்குச் சமாதிக்கோயில் எழுப்பிக் குருபூஜை நடத்துகிறார்கள்.

பொதுநலத் தொண்டு :

அண்ணாமலை அரசர் அவர்களின் தமையனார் திருவாளர் திவான் பகதூர் மு. இராமசாமிச் செட்டியாருக்குச் சிதம்பரம் நகரம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. இவர் எட்டாண்டுகள் (1908—1916) நகரசபைத் தலைவராகப் பணியாற்றினார். தாலுக்கா போர்டு தலைவராயும் இருந்தார். நகர் நலத்தில் அக்கறைகொண்டு பல நற்பணிகளாற்றினார். சிதம்பரத்திற்கு 2 மைல் தொலைவில் உள்ள வக்காலமாரி என்னும் ஊரிலிருந்து நீர் நிலை உருவாக்கிச் சிதம்பர நகரில் இல்லந்தோறும் குழாய்கள் மூலம் நீர் பெறுவதற்குரிய நீர்த்தேக்கம் ஒன்றைச் சொந்தப் பொருளைச் செலவிட்டுக் கட்டி அருளினார். "நீரின்றமையாது உலகு" என்பது அறிந்து அவர் ஆற்றிய தொண்டு நீள நினைத்தற்குரியது. இதனால் இங்கு இளந் தலைமுறையினரிடத்தில் யானைக்கால் நோய் தோன்றாதுபோயிற்று.

சிதம்பரத்தில் உள்ள நகர மக்கள் கலந்துறவாடவும் பொழுதுபோக்கவும் அரசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள் டவுன்ஹால் ஒன்று கட்டி மைதானததுடன் வழங்கியுள்ளார்கள். அஃது இன்றும் அவர்கள் பெயரால் அழைக்கப்படுகிறது.

கல்விப் பணி:

சிதம்பரத்தில் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியை 1915-ஆம் ஆண்டு தொடங்கி இங்குள்ளவர்களுக்கு எழுத்தறிவித்த இறைவனாக, மேற்குறிப்பிட்ட இராமசாமிச் செட்டியார் விளங்கினார். "தொண்டே வழிபாடு" என்பதுதான் இப் பள்ளியின் இலட்சியம். இதுவே இவர் வாழ்வின் இலட்சியமாகவும் விளங்கிற்று. அண்ணாமலை நகரிலும் இராமசாமிச் செட்டியார் உயர்நிலைப் பள்ளியுள்ளது. இப்போது அது ராணி சிதை ஆச்சி பெயரால் அழைக்கப்பெறுகிறது.

அண்ணாமலை அரசர் அவர்கள் தம் தமையனார் உயர்நிலைப் பள்ளிப் படிப்புக்கு உதவியதைப் போலத் தாமும் அதற்கு மேலுள்ள படிப்பிற்கு வழிசெய்ய வேண்டும் என்று விரும்பி 24—6—20ல் மீனாட்சி கல்லூரி தொடங்கினார்கள். அவர்களின் அயரா முயற்சியாலும் தளரா உழைப்பாலும் மழையனைய மாறா வண்மையாலும் 1929ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகமாக அது மலர்ந்தது. இதற்கு அவர்கள் அக்கால மதிப்பிற்கு அரைக்கோடி ரூபாய்க்குமேல் அள்ளி அள்ளிக் கொடுத்துள்ளார்கள். அறிஞர் பெருமக்களைத் துணை வேந்தர்களாகவும் பேராசிரியர்களாகவும் நியமித்துள்ளார்கள். ஆசியாவிலேயே தனியாக ஒருவர் நிறுவிய உடனுறை பல்கலைக் கழகம் இதுதான் என்று போற்றப்படுகிறது. "மலை தந்த முத்து" என்னும் மாண்புடைய அரசர் முத்தையா வேள் அவர்கள் கண்ணினைக் காக்கும் இமை போல இப் பல்கலைக் கழகத்தைக் காத்துவருவதால், வெள்ளி விழாக் கண்டு, தமிழ், ஆங்கிலம், அறிவியல், பொறியியல், உழவியல், தமிழ் இசை, கல்வியியல், முதலிய பகுதிகளாக விரிந்து தமிழுக்கும், தமிழர்க்கும், தமிழ் நாட்டிற்கும் தக்க தொண்டாற்றி வருகிறது. இப் பல்கலைக் கழகத்தில் பொறியியற் கல்லூரிப் பகுதிக்கு டாக்டர் RM. அழகப்ப செட்டியார் ஐந்து லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார்கள். அரசர் முத்தையா செட்டியார் அவர்கள் இங்கு முத்தையா பொறியியல் பல்கலைப் பள்ளி (Polytechnic) ஒன்றும் நிறுவியுள்ளார்கள். பொறியியற் கல்லூரியில் ராணி சீதையாச்சி அவர்களின் பெயரில் மாணவர் விடுதி ஒன்று உள்ளது. நகரத்தார் நன்கொடையாலும் நல் உழைப்பாலும் உருவாகிய இக் கல்வி நிலையங்களில் படித்துப் பட்டப்பெற்ற இம் மாவட்ட இளைஞர்கள் பலப் பலர்.

தமிழ்ப் பணி:

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தமிழ் வளர்ச்சிக்காகத் தோற்றுவிக்கப்பட்டது. அங்குத் தமிழ் நான்கு துறைகளில் ஆராய்ச்சியுடன் பயிற்றுவிக்கப்படுவதை அறிவீர்கள். பண்டிதமணி அவர்களும், முத்தமிழ் வித்தகர் பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் அவர்களும் இங்குத் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றியுள்ளார்கள். இங்கு இப்போதும் நகரத்தார் இளைஞர்களில் கவிஞர்களும், நாடகாசிரியர்களும் தமிழ்த் துறையில் சிறப்புடன் பணியாற்றி வருகிறார்கள். டாக்டர் வ. சு ப. மாணிக்கனார், டாக்டர் மெ. சுந்தரம் ஆகியோர் இங்குத் தமிழ் பயின்றவர்கள். மொழியியல் துறையில் செட்டிநாட்டுத் தமிழ் அமைப்பு முறைபற்றி ஆராயப்பட்டு வருகிறது. பண்டிதமணி எழுதிய கௌடில்யம் இங்கு, பல்கலைக் கழகத்தில் வெளியிடப்பெற்றது. இங்கு நூல் வெளியீட்டுத்துறை அதிகாரியாகப் பணியாற்றிய சோம. லெ. அவர்கள் "தென்னார்க்காடு மாவட்டம்" என்று ஒரு நூல் எழுதியுள்ளார்கள். அது மிகச் சிறந்த செய்திக் கருவூலமாக விளங்குகிறது. நாற்பது ஆண்டுகளுக்கு முன் தேவகோட்டை வெ. ஆ. தி. சிதம்பரம் செட்டியார் என்ற தமிழ் வடமொழி இரண்டிலும் சிறந்த புலவர் இங்கு வாழ்ந்து பல செய்யுள் நூல்களும், பிள்ளைத் தமிழ் நூல்களும் இயற்றியுள்ளதாக அறிகிறோம்.

கடியாபட்டி தி. நா. மு. முத்தையா செட்டியார் அவர்கள் 1924-ல் திருவருட்பாவைச் சுத்தப் பதிப்பாக 2000 பிரதிகள் அச்சிட்டு

வெளியிட்டார்கள். அப்பிரதி ஒன்று 30 ரூபாய் அடக்கம் ஆயிற்று. அதனை அன்பளிப்பாகக் கொடுத்தார்கள்.

பட்டமும் பதவிகளும் :

பெருங்கொடை வள்ளல்களாகிய ராஜா அண்ணாமலைச் செட்டியார், ராஜா முத்தையாச் செட்டியார், RM. அழகப்ப செட்டியார் ஆகியோர்களுக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் டாக்டர் பட்டங்களை வழங்கிப் பெருமைபெற்றது இங்கு ஆராய்ச்சிப் பட்டம் பெற்ற இளைஞர்கள் பலருண்டு. டாக்டர் SM. லெட்சுமணன் போன்ற அறிஞர்கள் பேராசிரியராகவும், கல்வி நாட்டமுடைய இளைஞர்கள் பலர் விரிவுரையாளர்களாகவும் உள்ளனர். இங்கு பணியாற்றி வெளி நாடுகளில் சென்று பட்டம், பதவி பெற்றவர்கள் பலர். சிறப்பாக அமெரிக்காவில் உள்ள மாதவன், டாக்டர் கருப்பஞ் செட்டி, இங்கிலாந்திலுள்ள டாக்டர் SM. வள்ளியப்பன் முதலியோரைக் குறிப்பிடலாம்.

டாக்டர் SP. சண்முகநாதன் போன்ற அறிஞர்கள் அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர்களாக உள்ளனர்.

நெய்வேலியில் பல இளைஞர்கள் இஞ்சினீயர்களாகவும் அலுவலாளர்களாகவும் பணியாற்றுகிறார்கள்.

தொழில்கள் :

இம் மாவட்டத்தில் பல ஊர்களில் நூற்றுக்கணக்கான வட்டிக் கடைகள் நகரத்தார்களுக்கு உண்டு. விக்கிரவாண்டியில் உள்ள நாகம்மை பஞ்சாலையும், கடலூரில் உள்ள நடராசா பிரிமியர் உரத் தொழிற்சாலையும் நகரத்தார்களுக்கு உரியன. முண்டியம்பாக்கம் சர்க்கரை ஆலையும் சௌத் இந்தியா கார்ப்போரேஷன் மேற்பார்வையில் உள்ளது. விழுப்புரத்தில் இந்தியா தோல் கார்பொரேஷன் தொடர்பாக தோல்வாங்கும் கிளை அலுவலகம் ஒன்று உள்ளது. சிதம்பரத்தில் கெம்பு ஸ்டுடியோவும், வடுகநாதன் திரைப்பட அரங்கும் நீண்ட நாட்களாகப் பேர்பெற்று விளங்குகின்றன. மணிவாசகர் நூலகம் நல்ல தமிழ் நூல்களை வெளியிட்டுத் தமிழ்ப் பணி செய்கிறது. அரசாங்கப் பாடப் புத்தகங்களை இம் மாவட்டத்தில் விற்கும் உரிமையைப் பாரிநிலையம் பெற்றுள்ளது. சிவபுரியில் புகையிலை விளையும் நிலங்களில் சில ஏக்கர்கள் நகரத்தாரின் உரிமையில் உள்ளன. மில் சாமான்கள், கார் சாமான்கள் விற்பவராகவும் சிமெண்டு, உரம் முதலியவற்றிற்கு விற்பனை ஏஜண்டாகவும் திண்டிவனத்தில் நகரத்தார் ஒருவர் நீண்டநாளாக இருந்துவருகிறார். மேலும் மருந்துக் கடை, ஆயில் மில், ஐஸ் பாக்டரி முதலிய சிறு சிறு தொழில்களிலும் ஈடுபட்டு இம் மாவட்டத்தின் தொழில் வளர்ச்சிக்குத் தொண்டாற்றுகின்றனர். அண்மையில் நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் தலைவராக வெளியார் துறையிலிருந்து முதன் முதலாக உயர்திரு. எம். வி. அருணாசலம் அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு தென்னார்க்காடு மாவட்டத்தில் நீண்ட நாட்களாக நகரத்தார்கள் கடவுட் பணியும், கல்விப் பணியும், தமிழ்ப் பணியும்,

(1½ கோடி ரூபாய்க்குமேல் 1953-ஆம் ஆண்டு மதிப்பீடு) செய்து, பிறர் நலம் பேணிப் பெரும் தொண்டுகள் ஆற்றித் தொழில் வளர்ச்சியிலும் முக்கிய பங்கேற்று வாழ்ந்துவருகிறார்கள்!

தென்னார்க்காடு மாவட்டத்திற்கு நகரத்தார்கள் செய்த அறச் செயல்களின் மதிப்பீட்டினை நாம் இதுபொழுது அறிந்துகொள்வது சாலப்பொருத்தமுடையதாகும். கீழ்க்காணும் மதிப்பீடு, வயிநகரம் இராமநாதன் செட்டியார் 1953-ல் எழுதிய "நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு' என்ற நூலிலிருந்து எடுக்கப்பெற்றதாகும்.

1.	சிதம்பரம்	43,00,000
2.	அண்ணாமலைநகர்	55,00,000
3.	புலிச்சரம், இளமையாக்கினார் கோயில்	5,99,000
4.	அனந்தேசுவரம் (சிதம்பரம்)	1.00,000
5.	திருவேட்களம்	1,00,000
6.	திரு நெல்வாயில் (சிவபுரி)	3,37,500
7.	திருக்கழிப்பாலை	61,000
8.	திரு நாரையூர்	4,500
9.	திரு நெல்வாயில் அரத்துறை	15,000
10.	கூடலையாற்றூர்	1,05,000
11.	திருவதிகை	20,000
12.	திரு நாவலூர்	20,000
13.	திரு முதுகுன்றம்	7,34,500
14.	திருக்கோவலூர்	1,50,000
15.	திரு வெண்ணெய் நல்லூர்	25,000
16.	திருப்பாதிரிப்புலியூர்	21,85,000
		ரூ. 1,42,56,500

தென்னார்க்காடு மாவட்ட வரலாற்றில்—வளர்ச்சியில் நகரத்தார்களுக்கு மிகச் சிறப்பான இடம் உண்டு என்பதில் சிறிதும் ஐயமில்லை.

புத்தக அரங்கம்

அரங்கத்தில் இடம்பெறும் நூல் : பூம்புகார் ஆற்றுப்படை

ஆய்ந்தவர் : வலம்புரி அண்ணாமலை

‘பூம்புகார் ஆற்றுப்படை’ என்ற பெயரை உடைய நூல், வேகுப்பட்டியைச் சார்ந்த, கவிஞர் பெரி. இலக்குமணச் செட்டியார் அவர்களால் இயற்றப்பெற்றது.

பூங்குன்ற நாட்டு மகிபாலன்பட்டியைச் சார்ந்த, பொருள் வளமும் கொடை வளமும், புலமை வளமும் பழுநிய சித்தாந்த மணி மொழிச் செல்வர் திரு. சி. இராம. இராமசாமிச் செட்டியார் அவர்களுக்கு, கவிஞர் அவர்கள் இந்நூலை உரிமையாக்கியுள்ளார்கள்.

தண்ணார் தமிழ் வளரும் தண்பாண்டி நாட்டின் தலைநகராகிய மதுரையம்பதியில், 24-3-68ல் அரங்கேற்றும் முகத்தால் இந்நூல் அறிமுகம் செய்யப்பெற்றது. மொழிக்கு மொழி தித்திக்கும் முத்தமிழ் வல்லார் பலர், இந்நூலுக்குப் பாராட்டுரை வழங்கியுள்ளனர்.

இந்நூல், டிம்மி அளவில் 50 பக்கங்கள் கொண்டது. காப்பு-கடவுள் வாழ்த்து வகையில் 21 செய்யுட்களும், நூல் நுதலிய பொருளைப் பற்றி நேரிசை ஆசிரியப்பாவில் 830 அடிகளும், இறுதியில் ஒரு வாழ்த்துச் செய்யுளும் பெற்றுத் திகழ்கிறது.

ஆற்றுப்படை என்ற சொற்றொடரை ஆறு + படை எனப் பிரித்து, ஆறு என்றால் வழி என்றும், படை என்றால் படுத்தல் என்றும் பொருள் கொண்டு, வழிப்படுத்தல் என விளக்கம் தருவர் அறிஞர். இதனையே இன்னும் சற்று எளிமையாக வழி காட்டுதல் என்று கூறலாம். கை காட்டுதல் என்று கூடச் சொல்லலாம்.

அஃதாவது, வள்ளல்பாற் சென்று பரிசு பெற்றுத் திரும்பும் ஒருவர், பரிசு பெறச் செல்லும் மற்றவருக்கு வள்ளல்தம் பெருமையையும், வழி வகைகளையும் கூறி வழி காட்டுதலாகும். இதனை,

“பெற்ற பெருவளம் பெறுஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன்எதிரச் சொன்ன பக்கம்”

என்பர் தொல்காப்பியர்.

எனவே, ஆற்றுப் படையின் அடிப்படை நோக்கம் ‘யான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்’ என்பதுதான் இத்தகைய நோக்கம் கொண்ட இலக்கியம் படைத்து இலக்கணம் கண்ட தமிழரது விரிந்த

மனப்பான்மை, அவரது வாழ்வியல் பண்பாட்டிற்கோர் எடுத்துக் காட்டாகும்.

இத்தகைய நோக்கம் கொண்ட ஆற்றுப்படை இலக்கியங்களைக் கற்பார், அவற்றின் சொற்சுவை பொருட்சுவை அளவில் அமைந்து விடாமல், அடிப்படை நோக்கமாகிய விரிந்த மனப்பான்மையைப் பெறுதல் வேண்டும்.

இப் பூம்புகார் ஆற்றுப் படையைப் பொறுத்தமட்டில் கவிஞர் பெற்ற பெருவளமாவது, பூம்புகாரின் பழஞ் சிறப்புக்களை இலக்கியங் களில் படித்துச் சுவைத்த இன்பமே ஆகும். இங்கு பெறுஅர்க்கு அறி வுறுத்தலாவது, பூம்புகார் முன்பு பெற்று இழந்த பெருவளத்தை மீண்டும் பெறத் தமிழக அரசுக்கு எடுத்து இயம்பியதாகும். பூம்புகார் மீண்டும், பழைய வளப்பத்தைப் பெறுமேயானல், கவிஞர் தாம் இலக்கியத்தில் படித்துச் சுவைத்த இன்பத்தை இன்றைய மக்கள் நேரில் சென்று கண்டு சுவைத்துப் பயனடைவர். இத்தகைய ஆற்றுப் படை அமைப்பை உற்று நோக்கினல், அது, புதியன புகுதல், என்ற விதிப்படி புதுமை தழுவிய சிறப்புடையதாகும்.

தருதற்கு உரியாரிடம் பெறுதற்கு உரியாரை ஆற்றுப்படுத்துவது ஆற்றுப் படையின் பொது இயல்பு. ஆனல் பூம்புகார் ஆற்றுப் படை யில், இப்பொது இயல்பில் புதியதொரு மாற்றம் தெரிகிறது. அஃ தாவது, பொருநனைத் தூதனுப்பி, பூம்புகார் இழந்த பழைய வளப் பத்தை அதற்குத் திருப்பவும் செய்து தருமாறு, தமிழக அரசை ஆற் றுப்படுத்துகின்றார் கவிஞர். இங்கு வளப்பத்தைப்பெறுவது பூம்புகார். வளப்பத்தைத் தருவது தமிழக அரசு. தருதற்குரிய அரசை, பெறுதற் குரிய இடத்திற்குச் சென்று தருமாறு ஆற்றுப்படுத்திய புதுமை, ஒரு புரட்சிதானே!

மேலும், இரு தரப்புக்கு இடையில் பொருநனைத் தூதனுப்பித் தூண்டுகின்ற காரணத்தால், இதனைத் தூதிடையிட்ட ஆற்றுப் படை என்றும் கூறலாம்.

பூம்புகாருக்கு வளப்பத்தைச் செய்து தரும் தமிழக அரசை

‘ நற்றவம் பெருக நலம்பல சுரக்கக்
கொற்றவர் போலக் குணம்பல நிரம்பி
ஒருமையும் உரிமையும் உணர்ந்துகோல் ஒச்சும்
அருமையார் தமிழக அரசு’

எனப் பாராட்டியுள்ளார் கவிஞர்.

மன்னர் பின்னேர் ஆகி, மன்இணை மரியாதை பெற்ற தனவணிக ராகிய நகரத்தார்கள் பூம்புகாரில் வாழ்ந்த பெருமையையும், பாண்டி நாட்டிற்கு வந்த பெருமையையும், அவர் தம் நாட்டின் நான்கு எல்லையையும் நயமாகப் பாடியுள்ளார். மேலும் நகரத்தாரின் ஒன் பது கோயில்களையும், உட்பிரிவுகளையும், ஒன்பது கோயில்களிலும் அரு ளாட்சிபுரியும் சுவாமி அம்மன் பெயர்களையும் ஒழுங்கு பெறத் தொகுத்து அழகு பெறப் பாடியுள்ளார்.

இற்றை நாளில் புலமைச் சிறப்பும் தரும சிந்தையும் கொண்டு திகழ்ந்த-திகழ்கின்ற நகரத்தார் பெருமக்களையும் விதந்து சுட்டிப் பாராட்டிப் பாடியுள்ளார் கவிஞர்.

பள்ளத்தை நோக்கிப் பாயும் வெள்ளத்தைப் போலக் கருத் தோட்டம் கலந்த பாவோட்டம் தங்குதடையின்றிப் பாய்ந்தோடு கிறது. பூம்புகார் நகரச் சிறப்பைக் கூறும் பகுதியில்,

‘ ஆடல் மணக்கும் அரங்கெலாம்; இயலிசைப்
பாடல் மணக்கும் பதியெலாம்; மாலைகள்
சூடல் மணக்கும் தோளெலாம்; சூழ்வினை
வாடல் மணக்கும் மருளெலாம்; காதலர்
ஊடல் மணக்கும் உறவெலாம்; உடன்றபின்
கூடல் மணக்கும் குழுவெலாம்; அறம்பொருள்
தேடல் மணக்கும் தெருவெலாம்; இறையருள்
நாடல் மணக்கும் நகரெலாம்’

என வரும் அடிகளையும், முடிபுப் பகுதியில்,

‘ காண்புறும் எளிமைக் காட்சியை அகற்றி
மாண்புறும் பழமை வளம்பெறும் நகராய்த்
தோற்றுவித் திடவும் தொடர்புறும் இடர்களை
ஆற்றுவித் திடவும், அழகிய தமிழ்க்கொடி
ஏற்றுவித் திடவும், இளைஞருட் பழந்தமிழ்
நாற்றுவித் திடவும் நலமெலாம் பெருகவும்’

என வரும் அடிகளையும் படிக்கின்ற பொழுது பாவோட்டத்தையும், கருத்துச் செறிவுடன் கூடிய எதுகை மோனைச் சிறப்பையும் காணலாம். மேலும், நாவில் நடம் பயிலும் நற்றமிழ் அன்னை, கவிஞர் தம் பாவில் நடம் பயிலும் பான்மையையும் காணலாம்.

கவிஞர், பழந்தமிழ் இலக்கண இலக்கியங்களை ஊன்றிப் படித்து உணர்ந்து தெளிந்தவர் என்பதை, ஓசுநர், பாசவர், வாசவர், சில்லர், பொல்லர் என்பன போன்ற பழந்தமிழ்ச் சொற்களைக் கையாள்வதன் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

கம்பர், சடையப்ப வள்ளலைப் பாராட்டியதைப்போல, கவிஞரும், தமக்கு ஆதரவு நல்கிய திரு. இராமசாமிச் செட்டியார் அவர்களை

‘ தக்கோன் இராம சாமியைப் போன்ற
மிக்கோர் வாழ்வதால் மேன்மைகொள் நாடு’

என உவமை முகத்தால் சுட்டிப் பல இடங்களில் பாராட்டி உள்ளார்கள். இது, நன்றி மறவாமைக்கு எடுத்துக்காட்டாகும்.

பூம்புகார்ச் சிறப்புரைக்கும் இந் நூலை, வித்துவான் வகுப்பு மாண வர்க்குப் பாடமாக வைத்துச் சிறப்பிப்பது கல்வித்துறை வல்லார் கடமையாகும்.

தனவணிகர் சிறப்புரைக்கும் இந் நூலை, வீட்டுக்கு ஒரு நூல் வீதம் வாங்கி வைத்துப் படித்துச் சுவைத்துப் பயன் பெறுவது நகரத்தார் பெருமக்களின் கடமையாகும்.

புலமை முற்றியோரேயன்றி மற்றவரும் எளிதில் படித்துப் புரிந்து கொள்ளும் பொருட்டு, நூல் நுதலிய பொருளை உரைநடையில் சுருக்கி எழுதி அடுத்த பதிப்பில் சேர்த்து வெளியிடுதல் நலம்.

இந் நூலின் விலை ரூ. 1-50. கிடைக்கும் இடங்கள் :

கவிஞர் பெரி. இலக்குமணச் செட்டியார்.
வேகுப்பட்டி. (P. O.)
திருச்சி மாவட்டம்.

அன்னை நிலையம்
61. D. உசுமான் ரோடு
தியாகராயநகர், சென்னை-17

இரண்டு நாடுகளில் இருபது நாட்கள்

எம். அருணாசலம் பிகாம்.

ட்ரிங்...ட்ரிங்......ட்ரிங்...ட்ரிங்

"ஹலோ! அருணாசலம் பேசுகிறேன்."

"நான்தான் டாக்டர் ராமகிருஷ்ணன் பேசுகிறேன். ஓர் மகிழ்ச்சிகரமான செய்தி! பெர்லினில் நடைபெற இருக்கும் உலக சமாதானப் பேரவையில் பங்கு பெறும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. தாங்களும் அப் பேரவையில் கலந்துகொள்ள வருகிறீர்களா? வரும் வழியில் ரஷ்யாவிற்கும் சென்றுவரலாம்."

"என்ன டாக்டர்! திடீரென்று என்னைக்கேட்டால் நான் கூற என்ன இருக்கிறது. கரும்பு தின்னக் கூலியா. அதுவும் தங்கள் துணை இருக்கும்போது எனக்கு அதைவிட வேறு என்னவேண்டும்; முற்றிலும் சம்மதம்." "இனி ஆகவேண்டியதை நான் கவனிக்கிறேன்" "மிகவும் நன்றி டாக்டர்."

ஆகா. என்ன அருமையானதோர் வாய்ப்பு! உலக சமாதானத்திற்கும், மக்கள் ஒற்றுமைக்கும், நிறவெறி நீங்கவும், பாடுபட்ட அண்ணல் அமரர் காந்திஜியின் நூற்றாண்டு விழாக் கொண்டாடும் ஆண்டு இது. உலக சமாதானத்திற்காகப் பாடுபடும் நாடு இது.

(வரலாறு காணாத நூற்றாண்டு விழாக் கொண்டாடும் இந்த ஆண்டில் சமாதானம் விழையும் இந்தியநாட்டின்)உறுப்பினராகப் பெர்லின் உலக சமாதானப் பேரவையில் பங்கு பெறும் நல் வாய்ப்பு; வழியில் ரஷ்யாவின் வளர்ச்சியைக் காணும் பேறு.

என்னங்க! காபி ஆறுகிறது; எந்தக் கோட்டையைப் பிடிக்க இந்தச் சிந்தனை.

ஆமாம். ஜெர்மன் கோட்டையையும், ரஷ்யக் கோட்டையையும் பிடிக்கப் போகிறேன்.

என்ன! இந்த உலகத்தில்தான் இருக்கிறீர்களா?

இந்தப் பூ உலகத்தில்தான் இருக்கிறேன். நான் கூறுவது எல்லாம் உண்மை! உண்மையைத் தவிர வேறில்லை.

நம்ம டாக்டர் ராமகிருஷ்ணன் அவர்கள். அவர்கள்தான் ஆப்பிரிக்க ஆசிய ஒருமைப்பாட்டுச் சங்கத் தலைவர் (President Afro Asian Solidarity Organisation) அவர்கள் செர்மனியிலுள்ளபெர்லின் நகரில் இம் மாதம் 21-ஆம் தேதி நடக்கவிருக்கும் உலக சமாதானப் பேரவையில் பங்கு பெறுவதால் என்னையும் கூட வருமாறு அழைத்தார்கள். வெளிநாடு செல்ல

அரியதோர் வாய்ப்பு. அதிலும் மாநாட்டின் பிரதிநிதி! எப்பேர்ப் பட்ட மாநாடு! உலகசமாதானப் பேரவை! அதில் பங்குகொள்ளக் கசக்குமா? உடனே சரி என்று சொல்லிவிட்டேன். காற்றுள்ள போதே தூற்றிக்கொள்வது தானே உலக அனுபவம். நான் கூறியது சரிதானே. இரண்டு கோட்டைகளை இருபது நாட்க ளில் வென்று வரப்போகிறேன்.

சென்று வாருங்கள்! வென்று வாருங்கள்! கோட்டைகளைமட்டு மல்ல! நிரந்தர சமாதானத்தை யும் நட்பினையும், ஒற்றுமை யையும் கொண்டு வாருங்கள் என்று கூறி அப்போதே வெற்றித் திலகமிட்டாள் என் துணைவி

என் பயணத் திட்டத்தில் ஈடு பட்டேன் உடன்தான் தெரிந் தது பயணம் நினைத்தபடி அவ்வ ளவு சுலபமல்ல என்று; இரு பெருந்தடைகள். முதல் தடை பாஸ்போர்ட்டில் ஜெர்மன் மக் கள் குடியரசு, ரஷ்யா ஆகிய நாடு களுக்குச் செல்ல அனுமதிபெற் றுப் பதிந்துகொள்ளுதல். இது ஓரளவு சிரமத்துடன் நன்றே முடிந்தது. ஆனால் நீங்குமா நீங் காதா என்ற தடை டெல்லியிலி ருந்து அகில இந்திய அமைதிக் குழுவிடமிருந்து வரப்பெருத அங்கீகாரம். இதனால் பயணம் தடைப்படுமோ என்ற அச்சம். டில்லியிலிருந்து புறப்படவேண் டிய நாள் 19—6—69.இருப்பதோ இன்னும் ஆறே நாட்கள். கைக்கு எட்டியது காரியத்திற்கு உத வுமா? என்ற நிலை. யாரிடமும் எதுவும் கூற முடியாத சூழ்நிலை.

தெய்வம் துணையிருப்பின் பய ணம் உறுதியாகக் கிட்டும் என்ற திட நம்பிக்கையுடன் டெல்லி சென்று பயணத்தை உறுதிசெய்து கொள்வதென்ற திண்ணிய நெஞ் சத்துடன் 14—6—69-ந் தேதி காலை டாக்டர் அவர்களும் நானும் டெல்லிக்குப் புறப்பட் டோம். விமானத்தில் டாக்டர் அவர்களின் நண்பர் சென்னை மாநிலத் தொழிற் கல்வி இயக்கு நர் (Director of Technical Education) சிவலிங்கம் அவர்களின் தொடர்பு ஏற்பட்டது. அவர்கள் கட்டியதுதான் டெல்லியிலுள்ள தமிழ்நாடு மாளிகை என்ற தமி ழக அரசினர் இல்லம் என்பது பிறகு தெரியவந்தது. அவர்கள் தொடர்பால் டெல்லியில் தமிழ் நாடு மாளிகையில் குளிர் சாதனை செய்யப்பட்ட அறையில் தங்கும் வாய்ப்புக் கிடைத்தது.

இவ்விடத்தில் தலைநகரைப் பற்றி ஓர் வார்த்தை. பத்தாண்டு களுக்கு முன் டெல்லிக்கு என் குடும்பத்துடன் சென்றுவந்தேன். ஆனால் இன்று பார்க்கும்போது மாறுதல்கள் சில இருந்தாலும் பெருத்த மாறுதல்கள் இல்லை என் பதனைக் கண்டேன். இது நம்நாடு; நாம் நினைப்பதுபோல் வேகமாக முன்னேறவில்லை. மெதுவாகத் தான் வளர்ச்சியடைந்து வருகி றது என்ற எண்ணத்தையே எனக்கு அளித்தது.

தமிழ்நாடு மாளிகையிலிருந்து அன்று அமைதிக் குழு உறுப்பினர் கள் சிலருடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டோம். அவர் களில் ஒருவர் சென்னையில் புகழ் மிக்க தொழிற்சங்கத் தலைவரான ஏ. எஸ். கே ஐயங்கார் அவர்கள் அவர்களுடைய சகோதரர் திரு ஏ. எஸ் ஆர். சாரி அவர்கள். டெல்லி தலைமை நீதிமன்றத்தில் மிகவும் புகழ்வாய்ந்த குற்றவியல் வழக்குரைஞர் ஆவார்கள். அவர் கள இல்லத்தில் தங்கி இருந்த ஐயங்கார் அவர்கள் எங்களை அன்

ரிரவு விருந்திற்கு அழைத்திருந்தார்கள். அன்று உயர்ந்த பண்புள்ள உத்தமரான சாரி அவர்களைச் சந்தித்து விருந்துண்டோம். டாக்டர் அவர்கள் என் பயணத்திலுள்ள தடைபற்றிக் கூற, உலக சமாதானப் பேரவையின் இந்தியக் குழு உறுப்பினரான சாரி அவர்களும் என் பயணத்தை உறுதிப்படுத்த ஆவன செய்வதாகக் கூறினார்கள். அவர்களின் முழு முயற்சியால் பேரவையில் பங்கு பெறும் பெருநல் வாய்ப்புக் கிட்டியது. மறுநாள் 15—6—69ந் தேதி பயணம் உறுதியான பின்னர்தான் புற உலகைப்பற்றியும், பேரவையின் மற்ற உறுப்பினர்களைப் பற்றியும் சிந்திக்கத் தோன்றியது.

தமிழ் நாட்டிலிருந்து எங்கள் இருவரைத் தவிர, தமிழக மன்ற உறுப்பினர்களான தூத்துக்குடி நகரத் தந்தை எம்.எஸ். சிவசாமி, இராசபாளையம் நகரத் தந்தை எ. எ. சுப்பராஜா, மற்றும் திண்டுக்கல்லைச் சேர்ந்த தொழில் அதிபர் ஐசக் ஆகிய மூவரும் பேரவையில் பங்கு பெறுவோர் என அறிந்தோம். அன்று அவர்களைச் சந்தித்ததில் மட்டற்ற மகிழ்ச்சி. நாங்கள் இருவரும் ஐவரானோம். ஐவரும் அன்று இரவு ஐயங்கார் அவர்களின் விருந்தாளியானோம்.

அதன் பின் மூன்று நாட்கள் எவ்வாறு கழிப்பது. டில்லி நகரின் சிறப்பான இடங்களைச் சுற்றிப் பார்ப்பதிலும், சமாதானக் குழு உறுப்பினர்களுடனும் மிகுதி நாட்களைச் செலவிட்டோம்

18-6-1969 இரவு பேரவையில் பங்கு பெறும் இந்திய உறுப்பினர்களின் அறிமுகம் இதற்கென ஏற்பாடு செய்திருந்த விருந்தின் போது நிகழ்ந்தது. அந்த விருந்திற்குப் பின் முக்கிய உறுப்பினர்களான திரு. கே. டி. மாளவியா, உதவி சபாநாயகர் காடில்கர் முதலானோர் உரையாற்றினர். இந்தியக் குழுவின் தலைவரான திரு. வி கே. கிருஷ்ணமேனன் அவர்கள் முன்னதாகவே சிலருடன் பெர்லின் சென்றிருந்தார். பல்வேறு இந்தியக் கட்சிகளின் நாடாளு மன்ற உறுப்பினர்கள், பல்வேறு மாநிலங்களின் சட்ட மன்ற உறுப்பினர்கள், பல எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், வழக்குரைஞர்கள், கலைஞர்கள், சமூக ஊழியர்கள் முதலான 75 உறுப்பினர் கொண்டது இந்தியக் குழு. அதில் குறிப்பிடத் தக்கவர் சிலர். திருவாளர்கள் நாடாளு மன்றத் துணைச் சபாநாயகர். காடில்கர், சேர்ஷ மாளவியா, அருணு ஆசப்அலி, முல்க்ராஜ் ஆனந்த், ஜோகிந்தர்சிங் தபாள், பூபேஷ்குப்தா, யாதவ், பார்கவா ஆகியோர். இப்பேரவையின் செயலாளர் நம் குழு உறுப்பினரான பெரின் ரொமேஷ் சந்திரா என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.

எங்கள் பயணத் திட்டம் 19-6-69 காலை டில்லியிலிருந்து புறப்பட்டு வரலாற்றுச் சிறப்புமிக்க டாஷ்கண்ட் நகர் சென்று, மாஸ்கோ வழியாக 21-6-69 ஆம் தேதி பெர்லின் அடைவது.

டாஷ்கண்ட், மாஸ்கோ, பெர்லினைக் காண வருமாறு உங்களை அழைக்கின்றேன்.

(தொடரும்)

★

நமது சங்கங்கள்

வெ. கண்ணன் பி. ஏ., பி. எல்.,

"நகரத்தார்" என்ற சமூகம் தென்னிந்தியப் பகுதியில் மக்களிடையே குறிப்பிடத்தக்க மதிப்பையும் செல்வாக்கையும் பெற்று விளங்குகிறது. இதை ஓரளவுக்குத் தற்பெருமையாகச்சொல்லிக் கொள்வதாகச் சிலர் நினைக்கக் கூடும். என்ருலும் ஆராய்ந்து பார்த்தால் உண்மைதான் என்பதை யாரும் மறுக்கமுடியாது. இச் சமூகத்திற்குள்ள செல்வாக்கு, சமூகம் சிறியதுஒன்றுஎன்ருலும், இச் சமூகத்தைச் சேர்ந்த மக்கள் தொன்றுதொட்டுப் பலதரப்பட்ட தொழில்களில் ஈடுபட்டுப் பல்வேறு நாடுகளில் வசித்து வாணிபம் செய்து, ஈட்டிய பொருள்களைத் தங்களுக்கும் தங்கள் இனத்தவருக்கும் நன்மை புரியச் செலவு செய்ததோடல்லாமல்,பொது மக்கள் என்றென்றும் பயனடையும் வழிகளான ஆலயத் திருப்பணி, கல்விப்பணி போன்ற அறப்பணிகளில் சிறிதளவுட பயன் கருதாமல் ஈடுபட்ட காரணத்தால் கிடைத்ததாகும். இச் செல்வாக்கு நகரத்தார் சமூகத்தினர்டம் பரந்திருந்த செல்வ நிலையின் அடிப்படையில் கிடைத்தது ஆகும். பரந்திருந்த செல்வநிலை என்று முற்காலக்குக் குறிப்பிட்டு இன்றைக்குச் செல்வநிலை பரந்தில்லை என்று குறிப்பிட்டால் நம்மை அவ்வாறு ஏற்றுக்கொள்ளப் பலர்மறுக்கிருர்கள். நகரத்தார் சமூகத்தினரிடையே புகழோடு வளர்ந்தோங்கும் தொழில் நிறுவனங்களைச் சீரும் சிறப்புமாக நாட்டிற்கு நன்மை பயக்கும் வண்ணம் நடத்திவரும் தொழிலதிபர்கள் பலர் இருப்பினும், நகரத்தார் சமூகத்தினர் அனைவரும் பொருளாதார மேம்பாடு கொண்டு இருக்கின்றனர் என்று சொல்ல முடியாது. நகரத்தார் சமூகத்தினரில் பலர் வெளிநாட்டு வர்த்தகத்தையே முழுமையாக நம்பியிருந்தனர். இன்று உலகில் ஏற்பட்டிருக்கும் அரசியல் மாறுபாடு காரணமாகப்பலர் தங்களுக்குரிய செல்வங்களையும், தொழில்களையும் விட்டுவிட்டு நம் நாட்டில் ஏதேனும் சிறு தொழில்கள் செய்தோ, வேலைகள் பார்த்தோ வாழவேண்டிய நிலையில் இருக்கின்றனர்.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பிறகு நகரத்தார் சமூகம் நம்பியிருந்த வெளி நாடுகளில் பலவற்றில் இச் சமூகத்தினருடைய செல்வங்களுக்கும், தொழில்களுக்கும் அந்தந்த நாடுகளில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்கள் பெரும் பங்கத்தை விளைத்துவிட்டன. அந்நிய நாடுகளில் பெரும் நம்பிக்கைகொண்டு உள்நாட்டில் வசிக்க வீட்டினை மட்டும் கொண்டிருந்த நகரத்தார் குடும்பங்கள் பல. அவையனைத்தும் இப் பெருமாறுதலால் வறுமைக்குள்ளாகிவிட்டன. அக் குடும்பங்களில் பிறந்த குழந்தைகளுக்குக் கல்வியளிப்பதும் திருமணம் செய்விப்பதும் பெரிய பிரச்சனையாக மாறி எத்தனையோ குடும்பங்கள் சீர் குலைந்துவிட்டன. இவையனைத்தும் நகரத்தார் சமூகத்தினர் நன்கறிந்த ஒன்று. இந்த இடர்ப்பாடுகளைக் களைந்து சமூகத்தின

ருக்கு நல்ல ஒரு எதிர்காலத்தை அமைத்து இழந்த சுபிட்சத்தை திரும்ப அடையச் செய்ய நகரத்தார் சமூகத்தில் பலர் தனித் தனியேயும், கூட்டு முயற்சிகளாலும் பாடுபட்டு வருகின்றனர். கூட்டு முயற்சியின் பயனாகத் தோன்றியவைகள்தான் இன்று பல நகரங்களில் ஏற்பட்டு நடந்து வரும் நகரத்தார் சங்கங்கள் ஆகும். மேற்படி நகரத்தார் சங்கங்கள் சென்னை, திருச்சி, மதுரை, கோயம்புத்தூர், பொள்ளாச்சி, சேலம், சிதம்பரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இச் சங்கங்களின் முக்கிய நோக்கங்கள். சமூகத்தினரிடையே நல்லதொரு தொடர்பை ஏற்படுத்தி, சமூகத்தினரில் ஏழ்மைநிலையில்உள்ளவர்களுக்குக் கல்வி பெற நிதி உதவி செய்வது, திருமணத்திற்குள்ள பெண்களின் திருமணத்திற்கு நிதி உதவி அளிப்பது போன்றவையாகும். இந் நோக்கங்கள் மேற்படி சங்கங்களால் ஓரளவு நிறைவேற்றப் பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் இப்பொழுது செய்து வரும் தொண்டுகளையும், செய்யவிருக்கும் தொண்டுகளையும், இன்னும் செய்யவேண்டிய தொண்டுகளையும் பற்றி அடுத்த இதழில் காண்போம்.

●

அடுத்த இதழ்...!

அண்ணல் காந்தியடிகளின்

புகழ் போற்றும் பொன் மாலையாய்—

புகழ் விளக்கும் ஒளிச் சுடராய்—

நூற்ருண்டு விழாச் சிறப்பிதழாய்—

மலர்கின்றது.

நம் குலத்துப் பெருமக்கள்

பலரின் எழுத்தோவியங்கள்

இதழை அலங்கரிக்கின்றன.

ஆச்சிகள் உலகம்

சென்ற இதழில் - அன்பர் - ஆறு. அழகப்பன் அவர்கள் எழுதிய "அன்புள்ள ஆச்சிக்கு" என்ற கடிதத்தைத் தொடர்ந்து பல கடிதங்கள் வந்துள்ளன. அவற்றில் சில கடிதங்கள் இங்கே இடம் பெற்றுள்ளன.

தங்களுடைய நகரத்தார் மாத இதழ் வாங்கி வாசிக்கும் வாசகர்களில் நானும் ஒருத்தி. நகரத்தார் இதழினால் செட்டி நாட்டுப் பெண்கள் பலவற்றை அறிந்து கொள்ள உதவுகிறது. நகரத்தார் இதழ் இன்னும் சிறந்த முறையில் வர எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

சௌமிய ஆடி. ஜூலை 14, 1969 இதழில் வெளிவந்த ஆறு. அழகப்பன் எம். ஏ., எம். லிட். அவர்கள் எழுதிய 'அன்புள்ள ஆச்சிக்கு' என்ற கடிதத்தைப் பார்த்தேன். அதைப் பற்றிய என்னுடைய சில கருத்துக்களை எழுத ஆர்வம் கொண்டேன். எழுதலாமா? வேண்டாமா? என்று பல முறை சிந்தித்து முடிவில் எழுதத் துணிந்தேன். என் கணவர் அவர்களைக் கேட்டேன். அவர்களும் எழுதச் சொன்னார்கள்.

கடிதத்தில் கண்ட "கணவரின் நலத்தைவிட அதிகக் கவனம் கொண்டு நீங்கள் ஒரு நூலாம்படைகூட இல்லாமல் வீட்டைச் சுத்தமாக வைத்துக் கொள்வது" என்ற வரிகளைப் படித்தேன். பெண்களின் முதல் கவனம் கணவரின் நலமும் குழந்தைகளின் நலமும்தான். அதற்குப் பிறகுதான் மற்றவற்றில்.

"நம்முடைய பிள்ளைகள் மாதச் சம்பளக்காரர்களாக உள்நாடுகளில் சிறிய வேலைகளில் இருந்து அடுத்த முதல்தேதி எப்பொழுது வரும்? என்று ஏங்கிக் கொண்டு இருக்கிற காலமாகப் போய்விட்டது" என்று எழுதியிருப்பது போலத்தான், இன்று நகரத்தார் முக்கால் வாசிப் பேர்களுடைய நிலைமை இருக்கிறது.

பலகாரம், சாப்பாடு, முறைதலைகள், இவற்றைக் காலத்திற்கேற்ப மாற்றிக் கொள்ள வேண்டியது. அவற்றை யெல்லாம் செட்டியார்கள் ஒன்று சேர்ந்து உறுதியாகச் செய்தால் ஆச்சிமார்கள் அதைத் தட்டமாட்டார்கள்.

"எம்புட்டுப் பணம் உங்கள் வீட்டுப் பணம் என்று கணவரோடு பேசும்போது வார்த்தை வரலாமா? கணவனை உயர்வுபடுத்தினால் தானே நீங்கள் உயர முடியும்" என்ற கருத்து வரவேற்கத் தக்கது.

"ஆசைக்கொரு பெண்ணும், ஆஸ்திக்கு ஒரு ஆணும் பெற்ருல் கூட உங்களது அன்பு ஆசை எல்லாம் மகள் மேல்தான்" என்று எழுதியிருப்பது போலத்தான் இன்று நிறையக் குடும்பங்களில் இருந்து வருகிறது. இந்த இடத்தில் எங்கள குடும்பத்தைப் பற்றி நான் கொஞ்சம் சொல்ல விருமபுகிறேன்.

எங்களுக்கு 11 வயது மகளும், 8 வயது மகனும் இருக்கிருர்கள். எங்களுடைய அதிகமான அன்பு, ஆசை எல்லாம் மகன்மேல்தான். காலப போக்கில் எங்களது மனம் எப்படி மாறுமோ? தெரியவில்லை.

'இரண்டு குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு ஊர் வந்துவிட்டுச் செல்லத் துணிவில்லாமலிருக்கிருர்கள் என்றபடிதான் நானும் இருந்து வந்தேன். இப்பொழுது சில வருஷங்களாக எனக்கு அந்தத் துணிச்சல் வந்துவிட்டது.

செட்டியார்கள் மட்டும்சீர்திருந்திப் பயன்என்ன? ஆச்சிமாராகிய உங்கள் மனமும் அதில் சேர்ந்து ஈருயிர் மனமும் ஒருயிர் மனமாகி மலர்ந்தால் அந்த மணத்திற்கு மல்லிகைப் பூவின் மணம் கூட ஈடாகாதே? என்பதை வரவேற்கிறேன். நான் ஒருத்தி மட்டும் வரவேற்று என்ன பயன். செட்டி நாட்டு ஆச்சிமார்கள் எல்லாரும் ஒன்றுபட்டு உழைத்தால் மல்லிகைப் பூவைக் காட்டிலும் இனிய மணம் பரப்பலாம்.

எங்கள் ஊரில் (எங்கள் ஊர் கல்லல்) பத்துப் பன்னிரண்டு வருஷங்களுக்குள் உருவான புள்ளிகளில் முறைதலைக்கு ரூபாய் சாமான்கள் வாங்கிக் கொள்வதில்லை. நாங்கள் எல்லாம்கூடச் சொந்த ஆச்சி வீடுகளிலும் சரி, உறவினர் வீடுகளிலும் சரி, பங்காளி வீடுகளிலும் சரி, முறைதலைக்கு ரூபாயோ சாமான்களோ, ஊரில் சடங்கு ஆனதற்கு, பிள்ளை பிறந்ததற்குச் சாமானோ ரூபாயோ வாங்குவதில்லை. கல்யாண விசேஷங்கள் சொல்ல வருபவர்களுக்குப் பாக்குக்காக 25 பைசாவும், பணம் எழுதுவது 25 பைசாவும்தான். அவர்களிடம் நாங்கள் வாங்கிக் கொள்வது பழம் மட்டும்தான்.

அதிகமான முறைதலை சீர்வரிசைகளால் இன்று மணமாக வேண்டிய பல பெண்களுக்கு மணம் செய்து மகிழ முடியாமல் பல பெற்ருேர்கள் மனமுடைந்து போயிருக்கிருர்கள். இறந்த வீட்டில் பிரேதம் இருக்கும்பொழுதும் சரி, எடுத்த பின்பும் சரி, வடையும் பணியாரமும் செய்து சாப்பிடும் பழக்கத்தை நம்மினத்தவர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து நிறுத்த வேண்டுமெனத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

என் மனத்தில் பட்ட கருத்தினை எழுதியுள்ளேன். தவறுகள் இருந்தால் உங்கள் பிள்ளை என்று எண்ணி மன்னிக்க வேண்டுகிறேன்.

பார்வதி மீனுட்சிசுந்தரம்
105. ராமசாமித் தெரு,
சென்னை-1

அன்புள்ள தம்பி அழகப்பன் அவர்களுக்கு ஆச்சி உமையாள் எழுதிக் கொண்டது இப்பவும் உபயசேமம். அங்கு எல்லாருடைய நலனுக்கும் எழுதும்படி செய்ய வேண்டியது.

தாங்கள் எங்களுக்கு எழுதிய ஆனி மீ 27 உ கடிதம் "நகரத்தார்" இதழில் கண்டு களிப்புற்றேன்.

தாங்கள் எழுதியுள்ளது போல இல்லாமல் பெண்கள் எட்டாவதோடு நில்லாமல இப்பொழுது பட்டங்கள் பெற்று வருகிறார்கள் என்பதைப் பெருமிதத்தோடு கூறுகிறேன். தவிர, பக்தி, விருந்தோம்பல் சிக்கனம், வீட்டை, சாமான்களைப் பாதுகாக்கும் கலை முதலியவற்றைச் சொல்லும்போது எங்களை மிகவும் உயர்த்தி முறைதலைகளைப் பற்றிக் கூறும்போது உங்கள் உடன் பிறந்தவர்களாகிய எங்களை மிகவும் தாழ்த்திவிட்டீர்கள்.

தந்தையர்கள் இல்லாமல் தாய்மார்கள் மட்டுமா எதையும் பேசி முடிக்கிறார்கள். தந்தையர்க்கு ஆகும் செலவு எங்களுக்கு இல்லையா?

அவர்களுக்கு இல்லாமல் 'என் பணம்' எனச் சேர்த்து வைக்கும் அந்தச் சிறுவாட்டுப் பணம் அவசரத்துக்கு உதவும் என்று அவர்களுக்கே தெரியும். முன் வாழ்ந்த ஆத்தாமார்கள், அப்பத்தாள்மார்கள் இல்லை; இப்பொழுது உள்ள உங்கள் ஆச்சிமார்கள்!

சித. உமையாள்
லக்ஷ்மி பவனம்,
பள்ளத்தூர்.

அன்புள்ள ஆச்சிக்குக் கட்டுரை இன்றைய வாழ்க்கையின் மொத்தப் பிரதிபலிப்பாகும். நமது நாட்டுக்கோட்டை நகரத்தார் செய்யும் கல்யாணச் செலவுகளையே மற்ற மரபினர் மூலதனமாகக் கொண்டு வியாபாரம் செய்து அதிக லாபம் சம்பாதித்து விடுகிறார்கள். இந்தச் செலவுகள், முறைதலைகள், நம் மரபினரை நொடிக்க வைத்துவிடுகின்றன. அன்புள்ள ஆச்சிக்குப் போன்ற கட்டுரைகள் நம் மரபினரிடையே நல்ல மாற்றத்தையும் மறுமலர்ச்சியினையும் உண்டாக்கும் என நம்புகின்றேன்.

இராம-சொக்கலிங்கம் பி. காம்
நேமத்தான்பட்டி

திரு. அழகப்பன் அவர்கள் நம் ஆச்சிகளுக்கும் புரியக் கூடிய எளிய நடையில் மிகவும் தெளிவாக இன்றைய நாளில் நமது சமூகம் இருக்கும் நிலையில் ஆச்சிகள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை மிகவும் அழகாக எழுதியுள்ளார்கள். இது போன்ற பயனுள்ள செய்திகளை நகரத்தார் இதழில் தொடர்ந்து வெளியிட்டு வரவேண்டுமாய்க் கேட்டுக் கொள்கின்றேன்.

பெரி. அருணசலம்
(நெற்குப்பை)
பறங்கிப்பேட்டை

அன்புள்ள தம்பிக்கு,

தனது நாளது சௌமிய ஆண்டு ஆனிமீ 27உ கடிதம் கிடைக்கப் பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. தன் அத்தான், என் கணவர் குமாஸ்தாவாக வேலை பார்ப்பவர். நானும் ஓரளவு படித்திருக்கிறேன். அதனால் தன் கடிதத்தை உடனே படிக்க முடிந்தது. என்போன்ற இந்த நிலையில் உள்ள மனைவிமார்கள் நம் சமூகத்தில் தற்சமயம் ஏராளமாக இருக்கிறார்கள். நாங்களெல்லாம் இதைப்பற்றி நினைக்காத நாளில்லை. எங்கள் எண்ணத்தை தன் கடிதம் பிரதிபலித்துவிட்டதில் ரொம்ப சந்தோஷம்.

தன் கடிதத்தில் உள்ள பல கருத்துக்களை நான் ஒத்துக்கொள்கிறேன். ஆனால் ஒரு சில கருத்துக்களை நான் ஒத்துக்கொள்ள முடியவில்லை அதாவது ஆச்சிகளாகிய நாங்கள்தான் முன்வந்துசெய்ய வேண்டும் என்பதை ஒத்துக்கொள்ள முடியவில்லை. இதைப் பற்றி நம் இனத்து ஆண்களும் சரி பெண்களும் சரி, நாம் எல்லோரும் நினைக்கிறோம், பேசுகிறோம். ஆனால் செயல்படுத்துவது இல்லை. அதுதான் நம்மவரின் கோழைத்தனம். அடுத்தவர்கள் எதுவும் சொல்லி விடுவார்களோ என்ற அச்சத்தால் நம்மில் பலர் எதையும் பேச முன் வருவது இல்லை. உதாரணமாக, சிக்கனமாகச் செய்யவேண்டும் என்று சொல்வோர்கள் பக்கம் ஆண்கள் எல்லோரும் சேர்ந்துகொண்டு சிக்கனத்திற்கு ஆதரவு திரட்டினால் என்ன? சிக்கனமாக செய்பவர்களைப் பார்த்து கேலி செய்யும் பெண்களைக் கண்டிப்பதை ஒவ்வொரு நகரத்தார் ஆண் மகனும் தன்னுடைய கடமையாகக் கொண்டால் கேலிப் பேச்சுக்கள் தானாகவே குறைந்துவிடும். தம்பி தன் போன்ற சீர் திருத்த எண்ணம்கொண்ட இளைஞர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து நம் தாய்க்குலம் இந்த மாதிரி தேவையில்லாத பேச்சுக்கள் பேசுவதை விட்டொழிக்கப் பிரசாரம் செய்யவேண்டும்.

நம் இனம். அறம் வளர்க்கும் இனம். ஆண்டவன் பெயரால் அறம் செய்யத் தயங்காத இனம். இருந்தாலும் நம் பெண்கள் பலர் தனிப்பட்ட முறையில் பார்த்தால் மிக மிகக் குறுகிய மனம் கொண்டவர்கள். உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். முன்பு காவேரிப் பூம்பட்டினம் மருதவாணர் திருவிழா பார்க்கச் சென்றிருந்தேன். அங்கு நம் நகரத்தார் விடுதியில் பெண்கள் தனியாக அவரவர்கள் சமையல் செய்து சாப்பிடுவதற்கு வசதியாக விறகு வாங்கி வைத்திருக்கிறார்கள். அங்கு நம் ஆச்சிமார்கள் என்ன செய்தார்கள் தெரியுமா? அவரவர்கள் ஓர் அடுப்பின் மேல் பேர் எழுதிக்கொண்டு பக்கத்தில் ஏராளமான விறகை அள்ளிவைத்துக் கொண்டார்கள். ஒரே நாளில் விறகு இருந்த இடம் காலி. ஆனால் ஒவ்வொரு அடுப்பு பக்கத்திலும் ஏராளமான விறகு. மறுநாள் வந்த பெண்களுக்கு விறகு கிடைக்கவில்லை. அப் பெண்கள் மடத்தில் முறையிட்டார்கள். மடத்தில் உள்ள ஆண்கள் ஒவ்வொரு பெண்ணையும் விறகு கொடுக்கும்படி சொன்னார்கள். யாரும் தருவதற்கு சம்மதிக்கவில்லை. உடனே புதிதாக ஒரு வண்டி விறகு வாங்கிப்போட்டார்கள். திருவிழா முடிந்தது. பெண்கள் மூட்டைகளை கட்டிக்கொண்டு அவரவர் ஊர்களுக்கு புறப்படும்பொழுது (தான் எழுதியிருப்பதுபோல் பத்துக் காசுக்கு பானை சட்டி வாங்கி தன்னுடைய ரூபாய் முந்நூறு விலையுள்ள பட்டுப் புடவையில் வைத்துக்கொண்டு புறப்பட்டார்கள்). மடத்தில் ஏகப்

பட்ட விறகு மிஞ்சிக் கிடந்தது. இதனால் மடத்தில் நிர்வாகம் செய்ப வர்களுக்கு எவ்வளவு தொல்லை. ஏன் இந்த நிலைமை? நம் வீட்டுப் பெண்கள் கூடிக் கலந்து வாழும் தன்மையில் சற்றுத் தாழ்ந்தவர்கள். வேறு எத்தனையோ நல்ல குணம் நம்மிடம் இருந்தும், நம்மிடம் உள்ள இந்தப் பொறுப்பு அற்ற தன்மை நம்மை மற்றவர்கள் முன்பு இழிவு படுத்திவிடுகிறது. இதை உணர்பவர்கள் மிகக் குறைவு. நம் செட்டியார்கள் இப்படி வட்டிக் கணக்கு பார்த்துக்கொண்டு வாளா இருந்துவந்தால் எப்படி கல்யாண முறையில் சீர்திருத்தம் கொண்டுவர முடியும்? "முதலில் உன்னைத் திருத்திக்கொள். ஊர் தானே திருந்தும்" என்று ஒரு பெரியவர் சொன்னாரே அதுபோல, ஒவ்வொரு செட்டிநாட்டு ஆண் மகனும் தன் மனைவியை, சகோத ரியை, தாயை, கீழ் கண்ட விஷயங்களில் கண்டித்து திருத்துவது என்ற கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுதுதான் உண்மை மாற்றம் ஏற்பட முடியுமே தவிர, இந்த ஏட்டளவு கடிதங் கள் எதையும் செய்ய முடியாது.

1. ஆண்டவனின் ஆலயம் நம்முடைய மன நிம்மதி பெறுவதற் காக ஏற்பட்டது. அங்கே ராமலிங்க வள்ளல் சொன்னது போல 'அமைதி, அமைதி' என்று இருக்கவேண்டுமே தவிர ஊர் வம்பு பேசும் கூடாரமாக அதை ஆக்கக்கூடாது. இதில் ஒவ்வொரு செட்டியாரும் தன் மனைவிக்கு உண்மைகளை உணர்த்தி மனத்தெளிவோடு ஆண்ட வனை வழிபடுவதற்கு கோயிலுக்கு போ. ஊர் வம்பு பேசுவதற்குப் போகாதே என்று சொல்லிக் கட்டுப்படுத்தவேண்டும். இதை உண ராத பெண்களை இவ்வூர் அங்கயற்கண்ணி கோயிலுக்கு அழைத்து வந்து மற்ற இனத்துப் பெண்கள் ஆண்டவனை எப்படி வழிபடுகிறார்கள் என்பதை நேரில் காட்டவேண்டும்.

2. நம் வீட்டுத் திருமணத்திற்கு ஒரு மாத முன்பும் பின்பும் நாம் படும் தொல்லைகள் கொஞ்சமல்ல. நாம் பணம் எவ்வளவு செலவு செய்தாலும் கல்யாண வீட்டில் யாருமே நிம்மதியாக திருமண விழா வில் கலந்துகொள்வதில்லை. நாம் காலத்தை, பணத்தை, உழைப்பை விரையம் செய்கிறோம். அதன் பலனை அனுபவிக்கவில்லை. கொண்ட மனைவியை, குழந்தையை விட்டுப் பல்லாண்டு காலம் பிரிந்து அணு அணுவாக, பைசா, பைசாவாகச் சேர்த்த பணம் இங்கு நம் திருமணத் தில் ஒரே நாளில் யாரும் அனுபவிக்காமல் அழிகின்ற இந்த கொடூர மான காட்சியைப் பார்த்து வாழா இருப்பது நியாயமா? தாட்டிலையில் சாப்பிடுவதில் என்ன மதிப்பு? இலையையா சாப்பிடுகிறோம். இதைப் பார்த்துவிட்டுச் செல்லும் மற்றவர்கள் எல்லாம் செட்டியார்கள் எல் லாம் நல்ல கொழுத்த பணக்காரர் என்று எண்ணுகிறார்கள். ஆனால் அவர்களுக்குத் தெரியுமா? அவர்கள் சாப்பிட்ட தஞ்சாவூர் இலையும் சேலத்து மாம்பழமும் ஐயர் ஜிலேபியும் நான்குவகை குழம்பும் அத் திருமணம் செய்பவர்கள் வீட்டு மேங்கோப்பை விற்று வாங்கப்பட் டது என்று அவர்களுக்குத் தெரியுமா? அடுத்தவர் அப்படி மதிக்காமல் இருந்துவிட்டால் என்ன குறைந்துவிடுகிறது. எந்த உணவுப் பொருள் வீணானாலும் அது நமக்கு மட்டும் ஏற்படுகிற நஷ்டமில்லை. இந்த நாட்டிற்கே ஏற்படுகிற நஷ்டம். இதை ஒவ்வொருவரும் உணர்ந்து செட்டியார்கள் முன்வந்து உணவு முறையில் சிக்கனம் செய்யவேண் டும் என்பதை வீட்டுக்கு வீடு வற்புறுத்தவேண்டும். அதுபோல் சிக்கனமாக செய்கிறவர்களைப் பாராட்டவேண்டும். ஏளனம் செய்யக்

கூடாது. அவ்வாறு எளனப்படுத்தும் பெண்களை அஞ்சாது அடக்க வேண்டும்.

3. ஒரு கல்யாணம் என்று வந்தால் 40 பக்கம் நோட், நான்கு போட்டு இரண்டு கணக்கப்பிள்ளை வைத்து முறைதலைச்சிட்டை எழுதி ஆளுக்கொன்று வைத்துக்கொண்டு கொடுங்கோல் அரசனை விட அதிகாரம் செலுத்திவரும் நாள் என்று ஒழியுமோ அன்றுதான் நம் இனம் முன்னேறும் நல்ல நாள் என்று ஒவ்வோர் ஆண் மகனும் உள்ளத்தில் திடமாக எண்ணி முன்வரவேண்டும்.


4. காலத்திற் கேற்ப நாம் மாறவில்லை யென்றால் காலம் ஒரு நாள் நம்மை மாற்றிவிடும். தம்பி, இங்கு ஓர் அழகான காட்சியை தனக்கு நான் எழுத ஆசைப்படுகிறேன். ஜூலை மாதம் அமெரிக்க காலின்ஸ் சந்திரனை சுற்றிக்கொண்டிருந்த நாள். நான் நம் ஊர்பக்கம் திருமணத்திற்கு சென்றுவிட்டு பஸ்ஸில் திரும்பிக்கொண்டிருந்தேன். 45 வயது மதிக்கத்தக்க நம் செட்டியார் ஒருவரும் ஆச்சியும் பஸ்ஸில் பேசிக்கொண்டு வருகிறார்கள் "நம்ம அடுத்த வீட்டில் செய்து கொடுத்த முறுக்கு வடை எட்டுச் சுற்றுதான் இருந்ததாம்" இது ஆச்சி. "நம்ம பெண் கல்யாணத்திற்கு நாம் சுற்றிக்கொடுத்தது பத்துச் சுற்று முறுக்குவடை இல்ல" இது செட்டியார். தம்பி இந்தப் பேச்சைக் கேட்டு செட்டியாரை குறை கூறுவதா ஆச்சியைக் குறை கூறுவதா? தான் ஆச்சியை மட்டும் குறைபட்டு கடிதம் எழுதி யிருந்தாயே அதற்காக இதை சொல்ல வருகிறேன். அதனால் சந்திரனில் மனிதன் சுற்றிக்கொண்டிருக்கும் இந்த காலத்தில் முறுக்கு வடையை சுற்றிக் கொண்டிருந்தால் நாம் முன்னேற முடியுமா? நாம் வாழும் காலம் குறுகிய காலம் அந்தக் காலத்தை வீணடிக்கலாமா? அறிவால், ஆற்றலால், சீர்மிகு செயலால், கட்டிடக் கலையால், உயர்ந்திருக்கும் நாம் கல்யாணம் என்ற பெயரால் காலத்தை வீணடிக்கலாமா? இதிலும் நம் செட்டியார்கள் சிந்தனை ஓடவேண்டும்.

நாம் எல்லோரும் மனத்தில் ஒன்றை உறுதியாக நினைத்துக் கொள்ளவேண்டும். நம்மவரின் பணம் அழிவதால் நமக்குத்தான் நஷ்டம் என்பதை நினைவில் வைத்துக்கொண்டு அடுத்தவீட்டு ஆச்சிகள் அதைச் சொல்வார்களோ எதிர் வீட்டு ஆச்சி இதைச் சொல்வார்களோ என்ற நினைப்பை நாம் அறவே மறந்துவிடவேண்டும். யார் எதைச் சொன்னால் என்ன? நம் வீட்டு திருமணம் முடிந்த பத்து அல்லது இருபது நாட்களுக்குத்தான் சொல்வார்கள். பிறகு மறந்துவிடுவார்கள் அல்லவா? என்று நினைத்து நாம் எல்லோரும் ஒன்றுபட்டு செயலாற்றி நம்மவர் இனம் நாட்டில் செருக்கோடும் மிடுக்கோடும் திகழ பாடுபடுவோமாக.


கடிதம் மிக நீண்டுவிட்டது. தம்பி தவறு எதுவும் இருந்தால் மன்னித்துவிடு. தான் எழுதிய கடிதம் இருளில் தந்த விளக்கு. அது வளர்ந்து எல்லோருக்கும் வழி காட்டவேண்டும் என்ற ஆசையுடன் கடிதத்தை முடிக்கிறேன்.

V. லக்ஷ்மி
(பள்ளத்தூர்)
மதுரை—1.

கௌரவ மாநில மாஜிஸ்ட்ரேட்டுகள்



திரு. நாக முத்தையா



திரு. கே. என். சுப்பையா

அண்மையில், தமிழக அரசினர் நம் மரபினர்களான திரு. நாக முத்தையா அவர்களையும் திரு. கே.என். சுப்பையா அவர்களையும் கௌரவ மாநில மாஜிஸ்ட்ரேட்டுகளாக நியமித்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம். தமிழக அரசினருக்கு நம் நல்வாழ்த்துக்களை உரிமையாக்குகிறோம்.

திரு. நாக முத்தையா அவர்கள் சண்முகநாதபுரத்தைச் சேர்ந்தவர்கள். திருச்சி தேசியக் கல்லூரியிலும் காரைக்குடி அழகப்பா கல்லூரியிலும் கல்லூரிப் படிப்பினை மேற்கொண்டு-பி. காம். பட்டம் பெற்றவர்கள். நிறைந்த அளவில் சிறுவர் இலக்கிய நூல்களை (40-க்கும் அதிகமான நூல்கள்) எழுதியுள்ள இவர்கள் மழலைச் செல்வங்களுக்கு ஏற்ற பயன் மிகுந்த பாடல்கள் பலவற்றை மிக எளிய முறையில் எழுதி மழலைக் கவிஞர் என்ற சிறப்பினைப் பெற்றுள்ளார்கள். கல்லூரியில் பயின்ற காலத்திலேயே பல பொது அமைப்புகளில் தொடர்பு கொண்ட இவர்கள் சென்னை நகரத்தார் சங்கம் தோன்றுவதற்குக் காரனமானவர்களில் ஒருவராகவும் அச்சங்கத்தின் தொடக்க காலச் செயலாளராகவும் விளங்கியுள்ளார்கள். இப்பொழுது நகரத்தார் கலைக் கழகத்தின் பொதுச் செயலாளராக விளங்குகிறார்கள். ஆயுள் காப்புக் கழகத்தில் கணக்குத் தணிக்கைப் பிரிவில் (Internal Audit Department, Life Insunance Corporation of India, Madras) பணியாற்றி வருகிறார்கள். காந்தி நூற்றாண்டு விழாவினை ஒட்டி காந்தியைப் பற்றிப் பல்வேறு தலைவர்கள் எழுதி உள்ள கட்டுரைகளைத் தொகுத்து உயர்ந்த நூலாக்கியுள்ளார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் விரிவுரையாளராகப் பணிபுரியும் நாக அண்ணாமலை இவர்களுடைய சகோதரர் என்பது குறிப்பிடத் தக்கது.

திரு. கேஎன். சுப்பையா அவர்கள் நாச்சியாபுரத்தைச் சேர்ந்தவர்கள். கல்லூரிக் கல்வியினை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயின்ற அவர்கள் பி. காம். ஆனர்சு பட்டம் பெற்றுள்ளார்கள். ஆலாகி, விழுதாகி, நிழல் தரும் நல் தருவாகி விளங்கும் அண்ணாமலை அரசர் குடும்பத்தின் இளவல் மேன்மை மிகு, மு. அ. சிதம்பரம் செட்டியார் அவர்களுடைய நிறுவனமான சௌத் இந்தியா கார்பொரேஷன் ஏஜன்சிஸ் பிரைவேட் லிமிடெட்டில் வளர்ச்சிப் பகுதியில் பொறுப்பினராக, (Development Officer) பணியாற்றி வருகிறார்கள். பல துறைகளிலும் கட்டுரை எழுதும் வன்மை மிக்கவர்கள். இவர்களுடைய இனிய எளிய நடை படிப்பதற்கும் பயன் பெறுவதற்கும் மிகுந்த துணை உடையது. தமிழ் நாடு, மன்றம், கலை மன்றம், நவ இந்தியா முதலிய பல ஏடுகளில் நிறைந்த அளவில் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். எளிமையும் இனிமையும் இவர்களது குண நலன்களாகும். காலம் போற்றுதலும் நல்ல உழைப்பும் இவர்களது வளர்ச்சிக்கும் கடமை உணர்ச்சிக்கும் சான்றுகளாகும்.



கலைக்கும் நமக்கும் என்றும் நெருங்கிய தொடர்பு உண்டு. மலிந்த பூம்புகார் பட்டணம்தான் நம் முன்னோர் வாழ்ந்த நகரம் என்பதுகூட, இதற்கு ஒரு சான்றாக விளங்குகின்றது.

காலத்திற்கு ஏற்ப, நம்மவர்கள் கலை வளர்ச்சிக்குத் துணை நின்று வருகிறார்கள் புதிய வகையில் கலைப் பணிகளுக்கு ஆக்கமும் ஆதரவும் தந்து வருகிறார்கள். சென்னை நகரத்தில் இயல் இசை நாடகம் என்ற முத்தமிழும் வளர்வதற்கு சபாக்கள் என்று கூறப்படுகின்ற கலை நிறுவனங்கள் பெரும் துணைபுரிந்து வருகின்றன

முத்தமிழை வளர்க்கின்ற அமைப்பு என்பதனால்தானோ என்னவோ அண்மையில் முத்தமிழ்க்கலை மன்றம் என்ற ஓர் கலை வளர்ச்சி அமைப்பு, தலைநகரில் தொடங்கப் பெற்றுள்ளது. அந்த மன்றத்தின் தொடக்க விழாவிற்குதென்னிந்திய திரைப்பட வர்த்தகத் சங்கத் தலைவர் மேன்மை மிகு ஏஎல். சீனிவாசன் அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள்.

சட்டமன்ற மேலவை உறுப்பினர் திரு. க. அறிவழகன் அவர்கள் கலந்து கொண்டு வாழ்த்திச் சிறப்பித்தார்கள்.

தலைவர் அவர்கள் தம்முடைய உரையில் கலை மன்றத் தலைவர் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

"இந்தக் கலை மன்றத்தின் தலைவர் திரு. ராமனாதன் அவர்கள் கல்விப் பணிக்கும் கொடைப் பணிக்குமே. தம் வாழ்வை அர்ப்பணித்த கொடை வள்ளல் டாக்டர் அழகப்ப செட்டியார் அவர்களின் மருமகன் என்பது நமக்குப்



விழாத் தலைவர் மேன்மைமிகு ஏ.எல். சீனிவாசன் அவர்கள் மங்கல விளக்கினை ஏற்ற செயலாளர் திரு A. இலக்குவன் அவர்களும், துணைச் செயலாளர் திரு. P. M. ஜோதி அவர்கள் துணைபுரிகிறார்கள்

பெரு மகிழ்ச்சியைத் தருகின்றது. டாக்டர் அவர்களைப் போலவே தொண்டு செய்வதற்கு இந்த மன்றத்தைத் துவக்கியுள்ளார்கள் என்றே நினைக்கின்றேன். அவர்களுடைய தொண்டு வளரவும் வாழவும் நான் பெரிதும் விரும்புகிறேன்.”

கலைமன்றத் தலைவர் பற்றிக் குறிப்பிட்ட விழாத் தலைவரவர்கள், அத்தொடக்க விழாவில் முகமது பின் துக்ளக நாடகத்தை நடத்திய திரைப்பட நடிகர் ‘சோ’ அவர்களைப் பற்றிக் குறிப்பிட்டார்கள்.

நண்பர் ‘சோ’ அவர்களுடைய வெற்றிக்கெல்லாம் காரணம் அவர்களுடைய துணிவுதான். கலைவாணர் என். எஸ்: கிருஷ்ணன் அவர்கள் செய்த பணியை இப்பொழுது ‘சோ’ அவர்கள் செய்து வருகிறார்கள். இவர்களுடைய நாடகங்கள் சிரிக்க வைப்பதோடு சிந்திக்க வைப்பதாகவும் அமைந்துள்ளன என்று குறிப்பிட்டு சிறப்பித்துள்ளார்கள்.

அறிவழகன் அவர்கள் பேசியபொழுது கலை வளர்ச்சிக்கு இந்த மன்றம் பெரும் துணைபுரியும் என்று நம்புகிறேன் என்று கூறி வாழ்த்தினார்கள்,

சென்னை-14, நாவல் ஆர்ட் பிரிண்டர்சில் அச்சிடப்பெற்று, சேது நிலையத்திற்காக வெளியிடுபவர் பழ. சேது ஆச்சி, 12, இராமாநுசம் தெரு, சென்னை-17. தமிழ்நாடு.

ஆசிரியர் : புலவர் நாகசண்முகம்